விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 31 சனிக்கிழமை (17.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302




# எத் தேர்தலை முதலில் நடத்துவது?

# கூட்டணிகளுடன் ஜனாதிபதி பேச்சு

## இறுதி முடிபு சில தினங்களில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலையா? பொதுத் தேர்தலையா? முதலில் நடத்துவது எனக் கூட்டணிக் கட்சித் தலைவர்களை நேற்று அவசரமாக அழைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார். எனினும் இக் கலந்துரையாடல் முடிவின்றி நிறைவடைந்ததாகவும் விரைவில் மீண்டும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூடி முடிபெடுப்பதெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)




## தமிழர் படுகொலை குறித்த விசாரணைக்கு இலங்கை அரசிடமிருந்து பதில் இல்லை!

### ஐ.நா. மனித உரிமை பிரதிநிதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து அனைத்துலக விசாரணை ஒன்றை நடத்துவதற்கு இலங்கை அரசு இணங்காதமை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து அனைத்துலக (19 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு மேலும் உதவிகளை வழங்க இந்திய அரசு இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் கண்ணி வெடிகளை அகற்றுவதும் மற்றும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது ஆகிய பணிகளில் இலங்கை அரசுக்கு மேலதிக உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

ஆசிய கூட்டுறவு தொடர்பான அமைச்சர்கள் மட்டத்திலான கலந்துரையாடலில் கலந்து கொள்ள கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் பிரிநீட் கவுர் (19 ஆம் பக்கம் பார்க்க)

## புலிப் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்க பொதுமக்களின் பங்களிப்பும் அவசியம்!

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிப் போராளிகளாக இருந்தவர்களின் புனர்வாழ்வுக்கு அரசுடன் இணைந்து பொதுமக்களின் பங்களிப்பும் வேண்டும் என நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற் கொண்ட அமைச்சர் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விசேட மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதையை நிலைமைகள் தொடர் (19 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய எம்.பிக்கள் இலங்கை வர விசா மறுப்பு

(கொழும்பு)

வவுனியா முகாம்களில் உள்ள தமிழ் மக்களின் நிலை அறிந்து வருவதற்காக இலங்கைக்குப் பயணம் செய்ய முயன்ற கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு விசா அனுமதி வழங்க இலங்கைத் தூதரகம் மறுத்துள்ளது.

கனேடிய கென்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான பற்றிக் பிரவுண் மற்றும் பவுல் கலண்ட்ரா ஆகியோரின் விசா வேண்டுகைகளே நிராகரிக்கப்பட்டுள்ளன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மற்றும் மன்னாரிலிருந்து நேற்று 2004 பேர் யாழ்.வந்தனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, மன்னார் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 625 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 4 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, மன்னார் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 625 குடும்பங்களைச் (20 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையை வவு. நகரிலிருந்து ஆரம்பிக்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவையை வவுனியா நகரிலிருந்து ஆரம்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கையை ஏற்ற ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இதற்கமைய பத்து தினங்களிற்குள் வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இது (20 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விவசாயிகளுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தனங்கிளப்பில் நெற்காணி உள்ள விவசாயிகளுக்கான கலந்துரையாடல் இன்று சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் உள்ள சம்மேளன காரியாலயத்தில் நடைபெறவுள்ளமையால் அனைத்து விவசாயிகளையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சம்மேளன செயலாளர் சி.புவனதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-29)

## ஸ்ரீ அம்மா பகவான் பாத பூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நாளைஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நடத்தப்படவுள்ளது.

இதில் கலந்து கொண்டு பக்தர்கள், ஸ்ரீ அம்மா பகவானின் அருள் ஆசியைப் பெற்றுக் கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ச-14)

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம் முதுகல்விமாணிக்குத் தெரிவானவர்களின் புதிய பெயர்ப் பட்டியல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் முதுகல்விமாணி பட்டப்படிப்புக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை இலங்கை திறந்த பல்கலைக் கழகப் பரீட்சைப்பிரிவு வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஏற்கனவே வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலில் சில பெயர்கள் இடம் பெறவில்லை எனவும் முன்னையப் பட்டியலில் இடம்பெறாத சிலரின் பெயர்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் இதுவே சரியான பட்டியல் எனவும் யாழ்.பிராந்திய இணைப்பாளர் எஸ்.கந்தவேல் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான பதிவு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நாவலவில் உள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறும். இம் மாதம் 22ஆம் திகதி இடம்பெறவிருந்த பதிவுகளே நவம்பர் 5ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

தெரிவானவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஆர்.தனேஷ்குமார் (கோப்பாய்), செல்வி கே.விஜிதா (கொக்குவில்), எம்.ராஜலிங்கம் (மீசாலை), எஸ்.சிவகுமார் (சித்தன்கேணி), திருமதி எஸ்.சுஜாதா (யாழ்ப்பாணம்), வை.விதுபாகரன் (கரவெட்டி), வி.செல்வகுமார் (வரணி), எஸ்.சிவராஜா (உடுப்பிட்டி), செல்வி ரி.நிலாஜினி (மானிப்பாய்),

ஏ.ஜெயகணேஷன் (கொக் குவில்), திருமதி வி.விஜயசுந்தரம் (கந்தர்மடம்), திருமதி ரி.கேதீஸ்வரன் (புத்தூர்), ரி.தேவதயா ளன் (தெல்லிப்பழை), பி.சதீஸ்கரன் (கோண்டாவில்), டபிள்யூ.மதிதரன் (சுங்கானை), செல்வி எஸ்.கந்தையா (உடுவில்), செல்வி கே.ஜீவாஜினி (கட்டைப்பிராய்), திருமதி எஸ்.தயாபரன் (மீசாலை), வி.இ.கஸ்ரன் ரோய் (கொய்யாத் தோட்டம்), செல்வி ரி.நந்தினி (வட்டுக்கோட்டை), செல்வி ஆர்.தம்பிமுத்து (சுன்னாகம்). (ந)

## கலைமாணி பகுதி I பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

2008 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி-I 2005&2006 ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சை பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும் என வெளிவாரி பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா தெரிவித்துள்ளார். (ச)

## சாரணர் பாசறை முத்துத்தம்பி ம.வியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வருடாந்த சாரணர் பாசறைவிழா நிகழ்வு யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் ஜி.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (ந-14)

## பல்கலை மாணவர்கள் 96 பேருக்கு இலங்கை இந்து மாமன்றம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்வுக்குள்ளாகி வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வந்து சேர்ந்த மேலும் 96 மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி செய்துள்ளது.

இது தொடர்பான வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு மாமன்ற யாழ். பிராந்திய அலுவலகத்தில் மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பாக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.விஜயகுமார் கலந்து கொண்டார். ஆறு. திருமுருகன், மாமன்றயாழ். இணைப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் மாணவர்களுக்குரிய கொடுப்பனவை வழங்கினார்கள்.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து முதற்கட்டமாக யாழ். பல்கலைக்கழகம் திரும் பிய 56 மாணவர்களுக்கு இந்து மாமன்றம் ஏற்கனவே தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய நாட்காட்டி வெளியீட்டு விழா

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய நாள்காட்டி வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய நிர்வாகஸ்தர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆலய கட்டிடவடிவமைப்பில் அமைந்துள்ள விடயங்களை அறிஞர்கள் விளக்கும் நிகழ்வும் சிறப்புரையும் இடம் பெறவுள்ளது.

நாவலர் பெருமானின் திண்ணைப் பள்ளி முதல் சிதம்பரம் மேல் நிலைப்பாடசாலை வரை என்ற தலைப்பில் திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் நல்லையா விஜயசுந்தரமும் நாவலரும் இன்றைய சமுதாயமும் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக கணித புள்ளி விபரவியற்துறை விரிவுரையாளர் கலாநிதி சிவக்கொழுந்து சிறிசற்குணராசாவும் திருவாவடுதுறை ஆதீனமும் நாவலரும் என்ற தலைப்பில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும் நாவலர் பாரம்பரியத்தில் ஊறிய காரைநகர்ப் பெரியோர் என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் எல்.சிவமகாலிங்கமும் The Champion Reformer of Hindus என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை தகைமைசார் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்களும் விளக்கவுரை ஆற்றவுள்ளனர். இந்நிகழ்வின் சிறப்புரையினை ஆசிரியர் தமிழருவி த.சிவகுமார் நிகழ்த்தவுள்ளார். (ச-246)

## இராணுவத்தின் 60ஆவது ஆண்டை ஒட்டி 51ஆவது படைப்பிரிவால் சமூக நலத்திட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தின் 60ஆவது ஆண்டு விழா கடந்த 2009.10.10ஆம் திகதி கொண்டாடப்பட்டதுடன் அதனையொட்டி யாழ்ப்பாணம் 51ஆவது படையணி தலைமையகத்தால் பல்வேறு சமூகநல வேலைத்திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டன.

1949ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 10ஆம் திகதி இராணுவத் தளபதி பிரிகேடியர் கென்னஸ் சாம்வுடன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இராணுவம் இதுவரை 19 இராணுவத் தளபதிகளின் கட்டளையின் கீழ் இயங்கி வந்ததுடன் இதன் 18ஆவது இராணுவத் தளபதியான ஜெனரல் சரத்பொன்சேகாவினால் உலகின் முதலாம் இடத்திலிருந்த பயங்கரவாத அமைப்பொன்றுக்கு தலைமை வகித்த பிரபாகரனின் கதவை 2009.05.19ஆம் திகதி முழுமையாக மூடி 3 தசாப்த காலமாக முழு இலங்கை வாழ் மக்களுக்கும் கலக்கத்தை ஏற்படுத்திய கொடூர யுத்தத்தை முதலில் முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத் தளபதி என்பதன் மூலம் வரலாற்றில் இடம் பிடிக்கின்றார்.

தற்போதைய இராணுவத் தளபதியான லெப் ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் இராணுவத்தின் 60ஆவது ஆண்டு விழாவையொட்டி விடுத்த செய்தியில் இலங்கை இராணுவத்தின் அங்கத்தவர்களான நீங்கள் இலங்கை பிரஜைகள் என்ற ரீதியில் தமது பொறுப்புகளையும் கடமையையும் சிறப்பாக நிறைவேற்றிய இராணுவத்தினரென்றும் முழு இலங்கை வாழ் மக்களினதும் உலக மக்களினதும் பாராட்டுக்கு உரித்தாவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் யுத்தம் முடிபுற்றாலும் தாய்நாட்டிற்கான இலங்கை இராணுவத்தின் பொறுப்புகள் நிறைவு பெறவில்லை என்றும் வெற்றி கொண்ட சுதந்திரத்தை உயிர்த்தியாகம் செய்தேனும் பாதுகாத்துக் கொள்ள கடமைப் பட்டுள்ள உங்களது பிரதான பொறுப்பானது மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் மீட்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்ற தேவையான அபிவிருத்திப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியினது எண்ணக்கருவின் அடிப்படையில் 51 படையணித் தளபதியினால் இராணுவத்தின் 60ஆவது ஆண்டு விழாவையொட்டி மேற்கொள்ளப்பட்ட சமூக நலவேலைத்திட்டங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஏழ்மை நிலையிலுள்ள 3 குடும் பங்களின் வீடுகள் புனரமைத்துக் கொடுத்தல்.

வசந்தபுரம் ஸ்கந்தமாலா தமிழ்க் கலவன் பாடசாலை பிள்ளைகளின் நலன் கருதி குழாய் கிணற்றை புனரமைத்தல், யாழ்ப்பாணம் குருநகர் மற்றும் புத்தூர் வயோதிபர் இல்லங்களுக்கும் மானிப்பாய் அருளாவத்தை சிறுவர் இல்லத்திற்கும் மதிய போசணம் வழங்கல்.

யாழ்ப்பாணம் ஆதார வைத்தியசாலை மற்றும் சங்கானை அரசாங்க வைத்தியசாலை போன்றவற்றின் சுற்றுப் புறங்களை துப்புரவு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டன என 51ஆவது படைப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அவசர சிகிச்சை பிரிவை அபிவிருத்தி செய்ய நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப்பிரிவை அபிவிருத்தி செய்ய சர்வதேச மருத்துவக் குழுவால் 27 மில்லியன்ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பளை மற்றும் கோப்பாய் ஆகிய வைத்திய சாலைகளிலேயே அவசர சிகிச்சைப் பிரிவு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இவ் வைத்தியசாலைகளில் அதிநவீனத்துவம் வாய்ந்த உபகரணங்கள் மருத்துவ விஷேட பயிற்சிகள் என்பன வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-7)

## யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தெற்கிலிருந்து 14 வைத்தியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியர்களின் பற்றக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தென்பகுதியில் இருந்து 14 வைத்தியர்களுக்கு யாழ்.மாவட்டத்தில் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இவ் வைத்தியர்கள் சாவகச்சேரி, நயினாதீவு, ஊர்காவற்துறை, காரைநகர், சங்கானை, பருத்தித்துறை, கோப்பாய் மற்றும் யாழ்.மாவட்ட நலன்புரி நிலையங்களில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

மேலும் 7 வைத்தியர்களுக்கு அடுத்த வாரமளவில் நியமனம் வழங்கப்படவுள்ள தாக யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-7)

குமரன் சில்க்ஸ்
Kumaran Silks
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
சாறி, ஸ்கேட் & பிளவுஸ், ரிசேட் வகைகள் (ஆண்கள், பெண்களுக்கானது)
சிறுவர் சிறுமியர்களிற்கான சல்வார், சூட் வகைகள் சூட்டிங்சேட் அனைத்து
ஆடை வகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
குமரன் சில்க்ஸ்
இல. 2A, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(C-3517)

தீபாவளியை முன்னிட்டு
நெற் போன் நிமிடம் முகம் பார்த்து கதைக்க } 2/=
Net Browsing 40/=
சகல பாதணிகளும் 5% கழிவு
கணபதி நெற் & சூ பலஸ்
320, பலாலிவீதி, ஆலடிச்சந்தி. (பரமேஸ்வராசந்தி அருகில்)
T.P:- 0212225300
(8788)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் – 17.10.2009





அனைவருக்கும் NDB வங்கியின் தீபத்திருநாள் வாழ்த்துக்கள். அத்துடன் உங்களுக்கு கைகொடுத்து உங்கள் வாழ்வில் புத்தொளி பரவச் செய்ய NDB வங்கி தனது யாழ் கிளையை ஒக்டோபர் 19ம் திகதி ஆரம்பிக்கின்றது.

யாழ்ப்பாணக் கிளை : 62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2221180 /1 முகாமையாளர்: 077 3522527

NDB வங்கி
உலகத் தரத்திலான இலங்கையர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் - 17.10.2009


வாடிக்கையாளர்களுக்கு எமது உள்ளம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
பிஸ்கட், பால்மா, சொக்லேட், சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகை
மற்றும் பழவகை என்பவற்றை பெற்றுக் கொள்ளலாம்
**ப்மிலி சுப்பர் ஸ்பொட்**
சந்தை அருகாமை,
மானிப்பாய்.


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இதயம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
**சரவணா புடவையகம்**
நவநாகரிக ஆடைத்தெரிவிற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
**SARAVANA TEX**
NALLUR
526, பருத்தித்துறைவீதி
நல்லூர்
(சிவன்கோயில் அருகாமை)
யாழ்ப்பாணம்.


அனைவருக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்
தங்க நகைகளை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**அசோகா நகை அகம்**
**ASOKA JEWELLERS**
இல.111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 6290

அனைவருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
**ராம்கோ சீமெந்து**
RAMCO CEMENT

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக
தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி
செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுர மார்க்) என்பதை
மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!
ராம்கோ சீமெந்தின் ஏக
இறக்குமதியாளர்கள்
**ஐஸ்வர பகவரன் அன் கம்பனி**
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 2122, 021 222 2350

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
**வேல் முருகன் வாணிப நிலையம்**
**VELMURUGAN TRADERS**
தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான
வர்ண பெயின்ட் வகைகளும்
சுண்ணாம்பு, கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
56 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9437

அனைவருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
**சாரங்கா நகை மாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 6972
கிளை கொழும்பில்
உதயமாகியுள்ளது
சாரங்கா ஜுவலரி
இல.55, செட்டியார் தெரு,
கொழும்பு-11

T.P: 011 2434971 FAX : 011 2434071

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசிய

# கடற்படையால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு கப்பலில் செல்ல முயன்றபோது இந்தோனேசியாவின் கடற்படையால் ஜகார்த்தா அருகேயுள்ள மெரக் துறை முகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் 260 இலங்கை தமிழ் அகதிகள் தாம் காலவரையற்ற உண்ணாவிரதத்தை துவக்கியுள்ளதாகக் கூறுகின்றனர்.

கப்பலில் உள்ள சிறு குழந்தைகளைத் தவிர மற்றவர்கள் அனைவரும் உண்ணாவிரதத்தில் பங்கெடுத்துள்ளதாக தமிழோசைக்கு தெரிவித்த கப்பலில் உள்ள அகதிகளில் ஒருவர் உடனடியாக ஏதாவது ஒரு நாடு தமக்கு அடைக்கலம் கொடுக்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தே இந்தப் போராட்டம் நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

கப்பலில் உள்ளவர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கை சேர்ந்தவர்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த இவர்களில் சிலர் முகாம்களில் இருந்து தப்பி வந்தவர்கள் என்றும் அவர் நம்மிடம் மேலும் தெரிவித்தார்.

சட்ட விரோத குடியேறிகள் இந்தோனேசியா வழியாக தமது நாட்டுக்கு வருவதை இந்தோனேசியா தடுக்க வேண்டும் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் சில தினங்களுக்கு முன்புதான் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## யாழ்ப்பாணத்தில் விரைவில்—

# சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம்

## அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் அலுவலகம் ஒன்று வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படும் எனவும், வடபகுதியில் கட்சியைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இலங்கை துணைப்படைத் தலைவரும் அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருக்கின்றார்.

போர்முடிவுக்கு வந்தையடுத்து கட்சிக் கான யாழ்.மாவட்ட அமைப்பாளர் ஒரு வரை நியமித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி,வடபகுதி யில் கட்சியைப் பலப்படுத் துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே யாழ்ப்பாண மாவட் டத்துக்கான கட்சியின் செயலகம் ஒன்றைத் திறந்துவைப்பதற்குத்திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் பதவியையும் வகிக்கும் அமைச்சர் முரளிதரன், யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்சியைத் தேர்தலுக்குத் தயாரிக்கும் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும்,நவம்பர் 15 ஆம் திகதிக்குப்பின்னர் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் எனவும் தெரிவித் தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக தங்கராசா நியமிக் கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த முரளிதரன், இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றிய பின்னர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சுதந்திரக் கட்சியின் அலுவலகங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியைப் புனர மைப்புச் செய்து தேர்தல்களுக்குத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் திருமலை மாவட்டத்துக்கும் தான் அண்மையில் பயணத்தை மேற் கொண்டதாகவும் முரளிதரன் குறிப்பிட்டார். (ஓ-6)


# பாடசாலைக் கல்வியை

## அண்மையில் பூர்த்தி செய்த

# மாணவர்களுக்கு

## ஹற்றன் நஷனல் வங்கி

# யாழ் குடாநாட்டில்

## நடாத்தும் ஆரம்ப வங்கியியல் மற்றும் வணிகத்துறைச் சான்றிதழுக்கான கற்கை நெறி

| | | |
|---|---|---|
| அனுமதிக்கான தகமைகள் | - | • 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5சிறப்புச் சித்திகளுடனும் கணிதபாடம், ஆங்கிலமொழி அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. உயர்தரத்தில் ஒருபாடத்தில் சிறப்புச்சித்தியும், இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்பெற்றிருத்தல் வேண்டும் |
| பாடநெறியில் உள்ளடக்கப்படும் பாடங்கள் | - | • வியாபாரமும் வங்கியியலும்<br>• கணக்கியல்<br>• பொருளியல்<br>• முகாமைத்துவமும் கட்டமைப்புகளும் |
| பாடநெறி கற்பிக்கப்படும் மொழி | - | ஆங்கிலம் |
| காலம் | - | 60 மணித்தியாலங்கள் |
| இடம் | - | HNB சுன்னாக வாடிக்கையாளர் நிலையம் |

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும் *http://www.hnb.net* என்னும் இணையத்தளத்தில் "Careers at HNB" பகுதியினை பார்க்கவும். அனைத்து விண்ணப்பங்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தினூடாக 31.10.2009 முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

HATTON NATIONAL BANK

HNB

HNB முன்னேற்றத்தின் பங்காளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் – 17.10.2009

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துச்செய்தி



அன்பர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்தினைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அக இருளையும் புற இருளையும் அகற்ற வேண்டி வழிபாடு செய்யும் புனித நாள் தீபாவளி இத் திருநாளை தெய்வீக நாளாக அனைவரும் கருதி வழிபாடு செய்தல் அவசியம். எம் மண்ணில் பல இலட்சம் மக்களின் வாழ்வு இருளில் தொடர்கிறது. காலம் விரைவாகக் கடக்கிறது. கண்ணீரின் எல்லை வற்றவில்லை.ஏதும் அறியாக் குழந்தைகள் முதல் மூத்தோர் வரை வெளிச்சத்தைத் தேடுகிறார்கள். எங்கும் அன்பும் கருணையும், இரக்கமும் அரவணைப்பும் மிக்க உண்மை ஒளி உண்டாக வேண்டும்.அன்பு நிறைந்த அறத்தின் வழியில் அனைவரும் வாழ இந்நாளில் பிரார்த்திப்போம். கோபத்தை வளர்த்து பாவத்தை சம்பாதிப்பதை விட அன்பை வளர்த்து பண்பால் அனைவரும் உணர்ந்து வாழ இத்திருநாளில் அனைவரும் திடசங்கற்பம் கொள்வோம். தீமைகள் அகன்று அனைவரும் தீதின்றி வாழ ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம்.

ஆறு.திருமுருகன், தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவிதேவஸ்தானம் தெல்லிப்பழை.

## தீமைகள் நலிய தீபம் ஏற்றும் திருநாள்



தமிழர் தம் பண்பாட்டின் தனிச்சிறப்புக்களை அவர்கள் கொண்டாடும் திருநாட்கள் தத்துவார்த்த உண்மைகளுடன் உலகுக்கு உணர்த்துகின்றன.இதில் தைப்பொங்கலும், தீபாவளியும் இருவழிப்பட்ட உண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்தி நல் வாழ்விற்கு வழிகாட்டுவனவாகும்.

தைப்பொங்கல் நன்றியறிதலும், ஊக்கமும், உழைப்பும்,ஒற்றுமை உயர்வும் வேண்டியதன் சிறப்பை உணர்த்துவது போலத் தீபாவளியும் ஆணவமும், அநீ தியும்,கொடுமையும், அராஜகமும் அழிவினைத் தரும் என்பதை நன்கு அறிவுறுத்துவதாயுள்ளது.

அன்பும், அறனும், நற்பண்பும் கொண்டோரை ஆணவம் மேலீட்டினால் நரகாசுரன் எனும் அசுரன் இம்சைப்படுத்தியதையும், இதனைப் பொறுக்காதவர்கள் மனம் நொந்து இறைவனிடம் சரணடைந்து வேண்டுதல் செய்யவும், தன்னைச் சரணடையாதவர்களைக் காப்பாற்றக் கொடிய நரகாசுரனை இறைவனே அழித்துத் தன்னை சரணடைந்தோரைக் காப்பாற்றி நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் நின்றதனையும் தீபாவளித்திருநாள் எமக்கு உணர்த்துகின்றது.

வையக மாந்தர் வாழ்வாங்கு வாழும், வகைதனை அறிவுறுத்தற் பொருட்டே மதம் கோட்பாடுகளும், அதன் வழிப்பட்ட பெரு நாட்களும் வகுக்கப்பட்டன.

இவற்றின் உட்பொதிந்துள்ள நல் உண்மைகளை நாம் உணர்ந்து இத்தகு பொருட்களில் நமது எதிர்காலச் சந்ததியினர்க்கும் நல்வாழ்வு வாழ்வதற்கான நெறிகளைக் கடைப்பிடிக்க ஊக்குவித்தல் இந்த நன்நாள்களைக் கொண்டாடுவதால் ஏற்படும் பெரும் பயனாய் அமையுமன்றோ.

எனவே தீபாவளித் திருநாளில் நம்மைப் பீடித்துள்ள ஆணவம்நீங்கவும், அசுரகுணம் மறைந்து நற்குண, நற்பண்புகள் ஓங்கவும் தீய இருளகன்று தூய நல் ஒளி மயமான நல்வாழ்வு எல்லோரும் பெற்று இன்புறவும் வேண்டி எங்கும் தீப ஒளி ஏற்றித் தீபாவளித் திருநாளை இறைவழிபாட்டுடன் கொண்டாடுவோம்.

தர்ம ஒளி எங்கும் சுடர் விடுக.

எந்த அளவுக்கு நான் அதர்மத்தை ஒழித்து நன்னெறியில் நிற்கின்றேனோ, அந்த அளவிற்குக் கடவுளை அணுகிச் செல்கின்றேன்.எந்தஅளவிற்கு தர்மத்தினின்றும் விலகிச் செல்கின்றேனோ அந்த அளவுக்கு இறைவனுடைய காட்சியும் விலகிப் போகின்றது. அதர்மம் ஒழியும் போது தர்ம ஒளி சுடர் விடும்.இறைவனின் திருவருள் ஒளியும் எங்கும் பிரகாசிக்கும்.

நீர்வைமணி

## எங்கள் பண்பாட்டை வலியுறுத்தி வாழ்வை ஒளிமயமாக்கும் தீபத்திருநாள்



உலகம் ஒரு குடும்பம் ; மக்கள் அனைவரும் சகோதர சகோதரிகள், நாடு, இனம்,பொருளாதார ஏற்றத்தாழ்வு, மொழி,நிறம் என்ற எவையும் மனித இனத்தின் இணக்கத்திற்கு குறுக்கே நிற்க நாகரிக உலக மனிதன் அனு மதிக்கலாகாது. உலக அரங்கில் இன்று நிகழும் நிகழ்வுகள் எவையும் மகிழ்ச்சியூட்டுவனவாக இல்லை.

கல்வியும்,அறிவும்,செல்வமும் வளரும் அளவிற்கு மனித நெஞ்சில் ஈரமும் அன்பும் இணக்கமும் வளர்ந்தபாடில்லை. விண்ணில் இடம்பிடிக்கக் கற்றுத் தந்த விஞ்ஞானம் அண்டைவீட்டு மனிதனின் நெஞ்சில் இடம் பிடிக்கக் கற்றுத் தரவில்லை.

நாகரிகத்தை உணவு,உடை,வாழ்விடம் இவற்றின் வளர்ச்சியாகக் கருதினோமே தவிர அது பண்பாட்டு வளர்ச்சியோடு இணைந்த ஒன்று என்பதனை நினைவு கூர்ந்தோமில்லை. மதங்களின் பெயரால் உணர்ச்சி வசப்பட்டு கலகம் விளைவிக்க அறிந்தவர்களுக்கு அம் மதங்கள் கூறும் கடவுளர் யாவரும் ஒருவரே என்ற உணர வழி காணவில்லை.

மன வளர்ச்சி உண்டாகவில்லை.உரிமைக்காக போராடக்கற்ற மனித இனம் , கடமையை நிறைவேற்றிவிட்டே உரிமைக்குப் போராட வேண்டுமென்று அரிச்சுவடி உண்மையைக்கூட உணர மறுக்கிறது.

தீயவர்களை அழித்து நல்லவர்களை வாழவைத்த தினம் தீபாவளி எனக் கொண்டாடப்படுகிறது. தீபாவளியை நரகசதுர்த்தி என்றழைப்பர்.ஐப்பசி மாதத்தில் சூரியன் துலாராசியில் இருப்பர். அப்போது தேய்பிறையின் 14ஆம் நாளில் தீபாவளி கொண்டாடப்பெறும் திரயோதசி இரவு சதுர்த்தசி காலை கொண்டாடப் பெறுவதினால் இது நரக சதுர்த்தசி என வழங்கப்படுகிறது.

தீபாவளி என்றால் தீப வரிசை என்றும் கூறுவர். இந்நாளில் தீபங்களை வரிசையாக வைத்துக்கொண்டாடுவர். தீபாவளித் தினத்தன்று வரும் அமாவாசையன்று பித்ருக்களுக்கு பிதிர்த் தர்ப்பணம் செய்வது விசேஷம்.

பண்டிகைகள் பண்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தும் இந் நாட்களில் மனதில் உள்ள மாசுக்களை அகற்றுவதற்கு இறைவனைப் பிரார்த்தனை செய்வது முக்கியமானதாகும். பெரியவர்களை, பெற்றோரை , குருவை மதிக்கக் கற்றுக்கொடுக்கும் தினங்களாவன பண்டிகை நாட்கள் பண்பாடு காக்கும் நாட்களாக அமையட்டும்.

'செஞ்சொல்வாணர்'
இரா.செல்வவடிவேல்

## நிம்மதியும் சிறப்பான எதிர்காலத்திற்கும் இத் தீபாவளி திருநாளிலே இறைவனைப் பிரார்த்திப்போம்!



இன்று தீபாவளித் திருநாள். தமிழர்களின் பெருநாள். தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து அந்த ஒளியிலே இறைவனை கண்டு தரிசிக்கும் பொன்னான நன்நாள். துஷ்ட நிக்கிரக பரிபாலனஞ் செய்கின்ற காத்தற் கடவுளான மகா விஷ்ணு கொடுமையே உருவாக கொடிய ஆட்சி செய்த நரகாசுரனை வதம் செய்த நாள் இன் நன்நாளாகும்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சமும் தாழ்த்த சென்னியும் தந்த இறைவனின் பாதக் கமலங்களில் பணிந்து வணங்கி அன் று முதல் இற்றை நாள் வரை பட்ட துன்பங்கள் விலகி இனிமேலாவது இன்பமும் மகிழ்ச்சியும் நிறைந்த இனிய சுகவாழ்வு மலர வேண்டும் என்று உளமார பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெரும் உவகைய டைகின்றேன்.

தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் அவதாரம் செய்து துஷ்ட நிக்கிரக பரிபாலனஞ் செய்யும் காத்தற் கடவுள் உலகெங்கும் வாழ் மக்கள் அனைவரும் இனிது வாழ கடைக்கண் பார்வையாவது நல்க வேண்டும் என்று வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தியை பிரார்த்தித்து அவர்தம் பாதம் பணிந்து ஆசி வழங்குகின்றேன்

சிவ ஸ்ரீ.சோமாஸ்கந்த தாண்டபாணிக தேசிகர் , JP
(சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக் குருமார் சம்மேளனம், பிரதமகுரு , வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

## தீபாவளியில் நாமாவளி சொல்வோம்

தறப்பால் அடைப்புக்குள் கிடந்து
உறக்கம் மறந்து வெந்தவியும் ஜீவன்கள் – நாம்
கால்கள் இருந்தும் நடமாட முடியாது
முடமாகிப் போன அப்பாவிகள் நாம்
கண்கள் இருந்தும் காண்பதற்கு
இவ்வளவுதான் உலகம் என
வரையறுக்கப்பட்டவர்கள் நாம்
எந்த உதவியும் எமக்கு வேண்டுவதில்லை
சொந்த ஊரில் குடியிருக்கவிட்டால் போதுமடாசாமி
வசதி குறித்து பேசுவதெல்லாம்
பசப்பு வார்த்தைகளே எமக்கு
சொந்த மண்ணிலேயே பொழுதுவிடியும்
இப்பொழுது எங்களுக்கு சூரியன் அஸ்தமித்து விட்டது
உதயம் என்பது ஊர்மனைகளில் என்பதால் அந்த
உதவியை செய்ய வல்ல தூதர்கள்
கடவுளின் தூதர்களே
ஜல வெள்ளத்துள் அமிழ்ந்து போன
பூமிப்பந்தை தூக்கி நிறுத்தி நிமிர்த்திய
ஆதிமூலமே அநாத ரட்சகா !
தீபாவளித்திருநாளில் தீபாராதனை செய்யாவிடினும்
உன்
திவ்விய நாமாவழியை சொல்லித் துதிக்கின்றோம்
எவ்வழியிலேனும் ஊருக்கு வழிகாட்டு

அகதி முகாம்
அன்பன்

## "சகோதர சகோதரிகளின் கண்ணீர் துடைக்க எம்மாலான உதவி செய்வோமாக"

எங்கள் வாழ்வின் இருளை அகற்றி தெய்வீக ஒளி ஏற்றப்பட்டு வாழ்வு வளம்பெற – எதிர்காலம் சிறப்புற இறையருள் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டிய திருநாள் தீபாவளி.

தங்களது தாய் நாட்டிலே சுதந்திரத்துடன் –சகல உரிமைகளுடன் நிம்மதியாக வாழவேண்டும் என்பதே மக்களின் மனத் துடிப்பு. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ஆராய்ச்சியாளரும் அறிஞருமான சேர்.வில்லியம் ஜேம்ஸ் என்பவர் இந்து மக்களது வரலாற்றை அகழாய்வு செய்து "நினைவுக்கும் அப்பாற்பட்ட காலம் தொடக்கம் இந்துமக்கள் இந்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள்" என்றும், சிங்கள வரலாற்று ஆராய்ச்சியாளரான கலாநிதி போல் பீரிஸ் என்பவர் "விஜயன் இலங்கைக்கு வந்து சேருவதற்கு முன்பதாக இலங்கையிலே இந்தியாவும் போற்றி வணங்கிய நான்கு ஈஸ்வரத் தலங்கள் சில வழிபாட்டுக்காக இருந்தன. அவையாவன, திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பனவாகும்" என்றும் சொல்லியிருக்கிறார்.அத்தகைய பழம்பெரும் வரலாறு மிக்கஇனத்தைச் சேர்ந்தவர்கள் எமது மக்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகச் சொல்லப்படும் திருமந்திரம் தந்த திருமூல நாயனார் இந்த நாட்டை "சிவபூமி" என்று சிறப்பித்துக்கூறியிருக்கிறார். இச் சிவபூமியில் இன்று எமது உடன்பிறப்புக்களின் நிலைமை மிகவும் இக்கட்டான வேதனைக்குரியதாக இருக்கிறது.

இந்து மக்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி தினத்திலே அர்த்தமற்ற கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாமல் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகின்றோம். எந்தவொரு இந்துமகனுக்கும் செலவழிக்க பணமிருந்தால் அதை இன்றைய காலகட்டத்தில் அல்லற்படும் பல்லாயிரக்கணக்கான சகோதர சகோதரிகளின் நிவாரணத்திற்காக வழங்கி உதவவேண்டும். அவர்களின் கண்ணீரைத் துடைக்க எங்கள் அனைவரினதும் கடமையாகும்.

சொல்லொண்ணா வேதனையில் வாடும் எங்கள் மக்களது வாழ்வில் இணைந்திருக்கும் துன்ப இருளானது விரைவில் அகன்று அவர்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் விமோசனமும் அமைந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாக வேண்டும் என இத் தீபாவளி திருநாளில் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

வி.கயிலாசபிள்ளை
தலைவர்

கந்தையா நீலகண்டன்
பொதுச்செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் - 17.10.2009


ஏஷியன் பெயின்ற்ஸ் விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

உங்கள் இல்லங்களை அழகுபடுத்த மனம் கவரும்
வர்ணங்களை அள்ளி வழங்குகிறது

ASIAN PAINTS

ஏஷியன் பெயின்ற்ஸ் அக்ரிலிக் எமல்சன்

ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
வெயில், காற்று, மழையின் தாக்கத்திற்கு
தாங்கும் வகையில் உருவாக்கப்பட்டதுதான்

ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
(Asian Paints Weathertuff Ultima)

7 வருட உத்தரவாதம்

உங்கள் வர்ணப் பூச்சு தேவைகள் அனைத்திற்கும் உங்கள்
பிரதேச ஏஷியன் பெயின்ற்ஸ் விற்பனையாளர்களை நாடுங்கள்



ஏஷியன் பெயின்ற்ஸ்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ. பே:- 021 2227028

அனைவருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

கமலேஸ்வரி

தீபாவளிக்கு எல்லாமே புதுசு!

எமது புத்தம் புதிய காட்சியறையில்
எண்ணற்ற டிசைன்களில் புத்தம்
புதிய ஏராளமான தெரிவுகள்

சாறிவகைகள், சிறுவர்கள், சிறுமியரின் மனம்
கவர்ரெடிமேற் ஆடைத்தெரிவுகள், ஆடவர்களுக்கான
ஜீன்ஸ், ரீசேட், சேட் வகைகளுடன் பெண்களுக்கான
ரெடிமேற் வகைகள், இன்னும் பல புடவைத்
தெரிவுகளுக்கு யாழ்.நகரில்...

கமலேஸ்வரி
25, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 8419, 021 222 6303

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

தீபாவளியை முன்னிட்டு கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் மிககுறைந்த விலைகளில்!

✔ PC Assembling ✔ Computer Networking ✔ PC Upgrading ✔ Software Development ✔ PC Trouble shooting
✔ Virus Protection ✔ PC Service & Software installation

## தீபாவளி சிறப்புத் தள்ளுபடி!

3 வருட உத்தரவாதம்!

விற்பனைக்கு பிந்திய சேவைகள்!

கணனி பிரச்சனைகளுக்கான உடனடித் தீர்வுகள்

| 01 | 02 | 03 | 04 |
|---|---|---|---|
| 1.8 Dual core Celeron | 2.6 Dual core | 2.6 Dual core | 2.93 Core 2 Duo |
| Foxconn G31 | Foxconn G31 | Assus G31 | Intel G31 |
| 250GB HDD | 320GB HDD | 320GB HDD | 320GB HDD |
| 1 GB DDR II Memory | 1 GB DDR II Memory | 1 GB DDR II Memory | 1 GB DDR II Memory |
| CD Rom | CD Rom | DVD Writer | DVD Writer |
| ATX Casing | ATX Casing | ATX Casing | ATX Casing |
| 15."6" LCD Monitor | 15."6" LCD Monitor | 16" LCD Monitor | 19" LCD Monitor |
| Keyboard Ps/2 | Keyboard Ps/2 | Keyboard Ps/2 | Keyboard Ps/2 |
| Mouse Ps/2 | Mouse Ps/2 | Mouse Ps/2 | Mouse Ps/2 |
| 37500/= | 41000/= | 44800/= | 57500/= |

UPS 650V - 2.1 Woofer - 5.1 Woofer - Computer Table - PC Camera - 1GB Flash
4GB Flash - 8GB Flash - Epson T10 Printer - Epson LQ 300+ - Hp Deskjet D1560
- Hp Laser Jet 1505 12A Toner - 13A Toner - Electric Blower
PCI TV Capture Card - Epson Ribbion

PCST PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் – 17.10.2009


அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

750ML

IMPROVED FORMULA, PURITY GUARANTEED

VSP 1989

V.S.P

PREPARED UNDER HYGIENIC METHOD SPECIALLY FOR PHYSICIANS AND DOMESTIC PURPOSES

SPECIAL LUNCH OIL

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல:26 A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212224135, 0212229165
உரிமையாளர்: திரு.பொ.பாஸ்கரன்

SPECIAL V.S.P. GINGELLY OIL

சுகாதார முறையில் உணவிற்கும்
வைத்தியத்திற்கும்
விஷேடமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
வி.எஸ்.பி. நல்லெண்ணெய்
R/No: 11505



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

சகல விதமான எசன்ஸ் வகைகள், கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
தயாரிக்கும் பொருட்கள், பிஸ்கட் வகைகள், வாசனைத்திரவியங்கள்,
ஆயுர்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் ஓரிடமாகப் பெற்றிட நாடவேண்டிய இடம்
ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்...

161, கே.கே.எஸ் வீதி,
சத்திரச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 2219



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிட்டெட் எனர் ஐ.ஸ்சர் லங்காலிமிட்டெட் பொண்ரேறா
பிறாண்ட் லங்கா (பிறைவேற்) மலிபன் பிஸ்கட் உற்பத்தியாளர்
லிமிட்டெட் செல்காஸ் லங்கா லிமிட்டெட் U.S.A சமையல் எண்ணெய்
இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்

எஸ்.வி. முருகேசு

தொ.பே. 021 222 2911
021 222 2202

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

Multilac® WORLDWIDE www.multilac.com

வர்ண
உலகில்
புரட்சி

உயர்தரச் சான்றிதழ்களுக்கு
இப்போது அதிகம் செலவு
செய்யாதீர்கள்.

கந்தவேலன் வர்ணவங்கி
KANTHAVELAN COLOUR BANK

WE COLOUR THE WORLD

110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 2222822



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

கிருபா
லேணர்ஸ்

யாழ். நகரில் முன்னணி சாரதி பயிற்சிப்
பாடசாலை

புதிய நடைமுறையில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று கொள்ள
விசேட வாகன பயிற்சிகள் மற்றும் எழுத்து பரீட்சையில் சித்தியடைய
விசேட வீதி ஒழுங்கு பற்றிய வகுப்புகள் என்பன அனுபவம்
உள்ளவர்களால் நடாத்தப்படும். அரச ,தனியார் நிறுவன
ஊழியர்களுக்கு சனி, ஞாயிறு உட்பட பயிற்சியாளர்களுக்கு
வசதியான நேரங்களில் பயிற்சி வழங்க ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தலைமை: 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 2224353
0777225292

கிளை: மகாத்மா வீதி,
நெல்லியடி
தொ. பே: 021 3006550


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் - 17.10.2009




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்




கட்டிடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து,
Akzonobel பெயின்ற் வகைகள் ( எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ)
என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# கஜமுகன் ஹாட்வெயர்

147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 222 2833

இந்த
தீபாவளித் திருநாளில்
இலவச அழைப்புக்கள்
விரிவான சேவைகள் மூலம்
யாழ்ப்பாணத்திற்கு
ஒளியூட்டுவோம்

யாழ்ப்பாணத்திலுள்ள சண்டெல் வாடிக்கையாளர்களுக்கு
ஒக்டோபர் 17ஆம் திகதி மு.ப.6.00க்கும் பி.ப.6.00க்கும்
இடையே சகல பிரதேச/தேசிய அழைப்புக்களும்
முற்றிலும் இலவசம்.

யாழ்ப்பாணம் நிலைய தொலைபேசி: (021) 4920000/1
இணையத்தளம்: www.suntel.lk





Suntel
உங்கள் சேவை வழங்குநர்

* 021 பிரதேசக் குறியீடு கொண்ட
வாடிக்கையாளர்களுக்கு மட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் – 17.10.2009


மக்கள் மனமறிந்த வங்கி

## மக்கள் வங்கி

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
மக்கள் வங்கியின்
தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

நகை அடகு சேவைக்கான வட்டி
மேலும்
குறைக்கப்பட்டுள்ளது

தற்போது ரூபா 100/- க்கு
மாதாந்தம் ரூபா 1.46 மட்டுமே
வருடத்திற்கு 17.5% மட்டுமே

* "இசுரு உதான" கணக்கில் ரூ.5,000வை வைப்புச் செய்து ரூ.1,000 பெறுமதியான பணப் பரிசினை அனைவரும் பெற்றுக் கொள்ளுங்கள்.



* வளரும் உங்கள் அன்புச் செல்வத்துக்காக ஏற்கனவே ஆரம்பித்த அல்லது புதிதாக ஆரம்பிக்கும் "சிசு உதான" கணக்கில் ரூ.5,000வை வைப்புச் செய்து வெப் கெமரா ஒன்றுடன் இணைந்த லெப் -டொப் கணனி ஒன்றையும் பரிசாக வெல்லுங்கள்.

2009 ஒக்டோபர் 01 தொடக்கம் நவம்பர் 30 வரை கணக்குகளில் வைப்புச் செய்து பரிசுகளை வெல்லுங்கள்

2006 2007 2008 2008

HERO CYCLES GENUINE HERO SPARES Air Bike

காலங்கள் போனாலும் எமது தரமான உற்பத்தி மாறவில்லை. மற்றவர்களைப் போல் நாம் போலியானவற்றை வழங்கமாட்டோம் நவீன யுகத்தில் திறமையான தொழில் நுட்பங்களைக் கொண்டு உறுதியான சைக்கிள்களை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றோம்.

## 50 வருட சேவையில் உங்களுடன்

AIR BIKE
ATARI : BICYCLES
KAMIKAZI

## CENTRAL CYCLE STORES

93, Dam Street, Colombo-12
Tel: 0112441597, 0112432183
0112338220, 0114749678
0114910037
Fax: 0112338626
E-mail: cycle_20000@yahoo.com
Mobile: 0777763710

தீபத் திருநாள் தீபாவளியில் தீமைகள் தீய்ந்து
தெய்வீக ஒளி ஒளிர வாழ்த்துகின்றோம்

## Dulux

## சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

## Sivan Motor Stores




உங்கள் இல்லங்களை வர்ணமயமாக்கும்
Akzonobel
பெயின்ட் வகைகளின் யாழ் விநியோகஸ்தர்கள்

AkzoNobel

சிவகுமாரன் எண்ரபிறைஸ்
Sivakumaran Enterprise
75, Stanly Road, Jaffna.

சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் – 17.10.2009

அனைவருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

இதோ 171 ஸ்ரான்லி வீதியில்...

## S.P.N. Motors



உங்களது நன்மதிப்பு பெற்ற பிறீடம் எம்.எம்.எம். ஸ்கூட்டர், சைக்கிள், விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



Pulsar 180
CT 100
Discover

## எஸ்.பி.என் மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

"வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் கணேசன் சென்ரரின் இதயங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்"



கொட்டன் பிறின், பிறின் சாறிகள், டஸ்ட் சாறிகள், BOx சேட், T- சேட் ரவுசர், கொட்டன் பஞ்சாபி (துணி), ஸ்கேட் & பிளவ்ஸ், BOY சூட் வெல் வெற், சோட்ஸ் -BOYS, பஞ்சாபி மற்றும் கொட்டன் சாறி, கோலம், பனாரஸ் சாறிகள்

அனைத்து ஆடைவகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.



## கணேசன் சென்ரர்

கே.கே.எஸ் வீதி
(வைத்தியசாலைமுன்பாக)
இணுவில்.

தீபமே! தீபாவளியே! எம் வாழ்வில் ஒளியேற்று; தீமையை வெளியேற்று

## யாழ். நகரில் புதிய பொலிவுடன்

# E.S.P.N & Co.

- யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ்,யுனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.
- இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ ஆண்,பெண் ஸ்போட்ஸ்,யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுன்டின்,சொப்பர் மிதிவண்டிகளும், பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும்.
- பல்வகையான தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், சீடி, டெக் வகைகள், கசற் ரேடியோ வகைகள், டிஸ் அன்ரனா வகைகள், ஓடியோ, வீடியோ கசற்றுகள் சீடி வகைகள், பிலிம்றோல் வகைகள்,மணிக்கூட்டு வகைகள், மிக்சி வகைகள், றைஸ் குக்கர், ஒவன் வகைகள், சாஜ்ஸர் லைற் வகைகள், மின் கேத்தில் வகைகளும்.
- பினிக்ஸ் பிளாஸ்டிக் வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாட வகைகளும்
- மோட்டார் வாகன ரயர்,ரீயூப் வகைகளும் மற்றும் தலைக் கவசங்கள்.



இவை அனைத்துப் பொருட்களையும் ஒரே நவீனமயப்படுத்தப்பட்ட காட்சி அறைகளில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்



## இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

52,54, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021 222 3096 Fax: 021 222 4394

E-Mail:espn.if@ hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் - 17.10.2009




அனைவருக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

## விக்னேஷ்

பல் மூக்கு கண்ணாடியகம்

இல 546,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: 91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

86, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

தொ. பே. இல: 021 222 2486

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் யாவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

## ஆர்.வி.ஜி மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல: 222 129

## R.V.G ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

## லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்.

வடமராச்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறந்திருக்கும்மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. தொ. பே. இல: 021 2229053

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)

கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய டிசைன்களில் தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்



## ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம்

உத்தரவாதத்துடன் நகைகள் பெற்றுக் கொள்ளலாம்.

இல.10, பஸ் நிலையம், சங்கானை.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

## ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு விசேட சலுகைகளை பெற இந்துங்கள்

ஏ-9 பாதையூடாக போக்குவரத்துச் சேவை

- எதிர்வரும் 20 ஆம் திகதி வரை புடைவை வர்த்தகர்களின் பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்.
- குளிரூட்டிய பொருட்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டு 24 மணி நேரத்தில் உரிய இடத்தில் கையளிக்கப்படும். (சொசேஜ் வகைகள், பழவகைகள், ஐஸ்கிறீம் மற்றும் சொக்லேட் வகைகள், இறைச்சிவகைகள் வாரத்தில் இருதடவை இச் சேவை நடைபெறும்)
- முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை.
- எவருமே எதிர்பார்த்திராத மிகக் குறைந்த கட்டணங்கள்.
- அரச, தனியார் நிறுவனங்களின் நம்பிக்கையை வென்ற ஒரே நிறுவனம்.
- எமது நிறுவனத்திற்கு முகவர்கள் எவரும் இல்லை.
- பொருட்கள் ஒப்படைத்து 3 நாட்களில் கிடைக்கும்.
- இரு தசாப்த காலமாக மிகச் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் நிறுவனம்.
- தலைநகரிலும், யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு, புதிய லொறிகளுடன் செயற்படும் நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் அளிக்கக் கூடிய நிறுவனம்.




இன்றே நாடுங்கள்; உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
201, B, டாம் வீதி, கொழும்பு - 12
T.P: 0112433889, 0112435247, 0777674119

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2813, 021 222 4317


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் இரகசியம்

சிலருக்கு தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சிலருக்கு தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும். இதிலுள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள இந்தக் கதையைப் படியுங்கள் .

ஜப்பானில் பெரியவீரர் ஒருவர் இருந்தார். அவரின் பெயர் ஹொபுநாகா .

அவரிடம் படைவீரர்கள் கொஞ்சப் பேர்தான் இருந்தார்கள்.

சிறிய படைபலத்தை வைத்துக்கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் அவர் முறியடித்திருக்கிறார்.

அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர் ஹொபுநாகா. ஒரு சமயம் அவர் எதிரியின் மீது படையெடுத்துச் சென்றிருக்கிறார்.

அப்போது அவருடைய படைவீரர்களுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

இந்தப் போரில் நாம் வெற்றிபெற முடியுமா? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிப்பது என்று யோசித்தார்கள். கடைசியாகக் கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாக கேட்டு விட்டார்கள். ஹொபுநாகா பார்த்தார்.

'சரி' அதை நாம் முடிவுசெய்ய வேண்டாம். புத்த விகாரகைக்குப் போய்விட்டு வருவோம். ''பூவா, தலையா'' போட்டுப் பார்ப்போம். என்ன வருகிறதோ அதன்படி செயல்படுவோம்.

ஏனென்றால் .... போருக்குச் செல்லும் போது முழு மனதோடு போகவேண்டும். மனதில் ஊசலாட்டம் இருக்கக்கூடாது என்று கூறினார்.

அவர் கூறியதற்கு தளபதியும் படைவீரர்களும் சரி என்று ஒப்புக்கொண்டார்கள் .

உடனே அவர்கள் எல்லோரும் அங்கே பக்கத்தில் இருந்த புத்தர் கோயிலுக்குச் சென்றார்கள்.

ஹொபுநாகா உள்ளே சென்றார். எல்லோரும் ஆவலோடு வெளியில் காத்துக்கொண்டிருந்தார்கள். சிறிதுநேரத்துக்குப் பின் ஹொபுநாகா புத்த கோயிலிருந்து வெளியே வந்தார்.

தளபதி, துணைத்தளபதி எல்லோரையும் அருகில் அழைத்தார். அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக் காசை எடுத்தார். "இதோ பாருங்கள் ...... இப்போது 'பூவா, தலையா' போட்டுப் பார்க்கலாம். பூ வந்தால் தோற்றுவிடுவோம் தலை வந்தால் வெற்றி வெறுவோம். பூ விழுந்தால் போர் வேண்டாம். அதைத் தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்குப் போவோம் . விதி இப்போது நம் கையில்தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்புக் கிடைக்கிறதோ அதன்படியே நாம் நடந்து கொள்வோம்'' என்று கூறிவிட்டு தங்கக் காசை சுண்டினார்.

அது சுழன்று மேலே போய் கணீர் என்று தரையில் விழுந்தது. எல்லோரும் அதை ஆவலோடு பார்த்தார்கள். தலை விழுந்திருந்தது.

அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி .

எல்லோரும் உறுதியான முடிவுடன் போருக்குச் சென்றார்கள். வெற்றியோடு திரும்பினார்கள்.

வெற்றிவிழா கோலாகலமாக நடந்தது. அப்போது தளபதி உரை நிகழ்த்தினார். அதில் அவர் ''இந்த வெற்றியை தங்க நாணயம் தான் முடிவு செய்தது. அதனால் விதியை வெல்ல யாரால் முடியும்?'' என்று கூறினார்.

அவர் பேசிவிட்டு உட்கார்ந்ததும் தலைவர் ஹொபுநாகா தன்னிடமிருந்த அந்த தங்கக் காசை எடுத்து இரகசியமாகத் தளபதியிடம் கொடுத்தார்.

தளபதி அதை வாங்கிப் பார்த்தார். என்ன ஆச்சரியம் ! அந்த நாணயத்தின் இரண்டு பக்கமும் தலைதான் இருந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது ? வெற்றியின் இரகசியம் வேறொன்றுமில்லை மன உறுதி தான்.

எதைச் செய்தாலும் மனதில் குழப்பம் இருக்கக் கூடாது. "எண்ணித்துணிக கருமம்!" என்பது வள்ளுவர் வாக்கு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## தீபாவளி விழா

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்களுடன் இணைந்து இராணுவத்தின் 11 வி.ஜ.ஆர் படைப்பிரிவு நடத்தும் மாபெரும் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் இன்று மாலை 6.30 மணிக்கு கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திற்கு அருகாமையில் இடம்பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஓ-3)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு டான் தமிழ்ஒளி தொலைக்காட்சி நிறுவனம் இன்று மாலை தீபாவளித் திருவிழா நிகழ்வொன்றை நடத்தவுள்ளது.

இதில் 6மணிக்கு நாதஸ்வர வித்துவான் மு.சிவலிங்கம் (குகன்) குழுவினரின் நாதமழை மற்றும் இரவு 7 மணிக்கு ஈழ நல்லூர் அருணா இசைக்குழு வழங்கும் இன்னிசை கானம் ஆகியன கொக்குவிலிலுள்ள டான் தமிழ்ஒளி கலையகத்தில் இடம்பெறவுள்ளன. (ஓ-3)

## உலக வறுமை ஒழிப்புத் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக வறுமை ஒழிப்புத் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் பசிப் பிணியில் இருந்து மக்களை விடுவிப்பதற்கென ஐக்கிய நாடுகள் சபை 1992 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்புத் தினத்தை உத்தியோக பூர்வமாக அங்கீகரித்தது.

இதன் பிரகாரம் வருடம் தோறும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி வறுமை ஒழிப்புத் தினம் உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வறுமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சகல தரப்பினரும் உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் வறுமை ஒழிப்புத் தினத்தில் பல் வேறு நடவடிக்கைகள் உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஓ)

## இராசி பலன்

*17.10.2009*
*(புரட்டாதி 31 சனிக்கிழமை)*
*சதுர்த்தசி பிற்பகல் 12.41 மணிவரை*
*அத்தம் முன்னிரவு 10.38 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*ஐந்தாம் புரட்டாசிச் சனி, கேதார கௌரி விரதம் முடிவு, அமாவாசை விரதம்,, தீபாவளிப் பண்டிகை*

| | |
|---|---|
| மேடம் | உற்சாகம், அதிக பிரயாசை, சத்துரு ஜெயம், பொருள் சேர்க்கை. |
| இடபம் | உறவினர் மனஸ்தாபம், பணக் குறைவு, வேலைச்சுமை, சிறு வியாதி. |
| மிதுனம் | போசன சுகம், சுபசெலவு, நல்ல செய்தி, அதிக பிரயாசை. |
| கடகம் | எடுத்த காரியம் கைகூடும், தன்னம்பிக்கை, உறவினர் வருகை, வாகன சுகம். |
| சிங்கம் | கடின வார்த்தை, முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், புதிய முயற்சி, தேகநலன். |
| துலாம் | காரிய அலைச்சல், கோபப்படுதல், தனவிரயம், போசன சுகம். |
| விருச்சிகம் | எதிர்பாராத நன்மை,நல்ல செய்தி, காரிய அனுகூலம், விருந்துபசாரம். |
| தனுசு | தொழில் மேன்மை, உறவினர் சந்திப்பு, விருந்துபசாரம், மன மகிழ்ச்சி. |
| மகரம் | பிரயாணம், சுபசெலவு, நண்பர்கள் வருகை, போசன சுகம். |
| கும்பம் | மரியாதைக் குறைவு, வேலைச் சுமை, முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு. |
| மீனம் | நல்ல வரவேற்பு, செய்தொழில் விருத்தி, ஆரோக்கியநிலை, பொருள் சேர்க்கை. |

வளவன்

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் 15 பேரும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 6 பேரும் யாழ். கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் 8 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்**

க.கவிப்பிரியா-178 ,சி.தேனுசா -174 , கோ.வித்தகன்-171, அ. கௌசிகன் -166 ,வி.தனுசன்-158, யோ.சஜீவன்-156,த.லதிசனா -156,க.விதுரன்-154, சி.பியூலா-153, த.வேணுசன்-151, ந.துவாரகேசன்-150 ,த.பரணிதரன்-150 , க.கஸ்தூரிகா-150,இ.மோனிசா-150 ,ச.கஜலினி-144

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

ப.அஜித்தா-160 ,மு.தனோராஜ்-159, சு.கிருஷாந்த்-158 , ம. நிஷானி-153, ப.சஜீபன்-151 சு.சாதனா-141

**கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்**

க.சிவகலை-172, சு.சுபா-163, சி.கஜலக்சன்-152, கு.அனுசன்-145,சி.பிரதீபா-143,இ.ஜதுகுலன்-142, செ.சாரங்கன் -142, இ.தர்சன்-140

இப்பாடசாலையில் 20பேர் பரீட்சைக்குத் தோற்றியதில் (40%) 8பேர் சித்தியடைந்ததுடன் 15 பேர் 100க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## ஆசிரிய வாண்மை விருத்தி தினம்

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய வாண்மை விருத்திச் சபையினால் ஆசிரிய வாண்மை விருத்தி தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வல யக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமை கற்கையியல் துறை பேராசிரியர் மா. நடராசசுந்தரம் கலந்துகொண்டு புதிய நூற்றாண்டில் கல்வித்துறை எதிர்நோக்கும் சவால்கள் எனும் தலைப்பில் சிறப்புரை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக "கூடு சஞ்சிகை" வெளியீடு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கல், மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதலிடம் பெற்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஓ)

## நடமாடும் சேவை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் -180 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாக பிரதேச செயலாளர் அலுவலக அலுவலர்களுக்கான அறிவுறுத்தும் செயலமர்வு மற்றும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் பொதுமக்களுக்கான நடமாடும் சேவைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கான நடமாடும் சேவை 20ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திலும், வேலணைப் பிரதேச செயலகம், நெடுந்தீவு ,ஊர்காவற்றுறை ஆகிய உதவி அர சாங்க அதிபர் பணிமனைகளுக்கான சேவை 21 ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலகத்திலும் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கான நடமாடும் சேவை 22 ஆம் திகதி அன்று சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 80 |
| கரட் | 70 | 80 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 80 | 100 | 40 |
| வாழைக்காய் | 25 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 60 |
| பாகற்காய் | 120 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 170 | 200 | 140 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 280 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

பேராசிரியர்
க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

28

விஜய நகர அரசனுக்கத் துரோகம் செய்த ஆதோனித் தலைவனை அவர்கள் வென்று துரத்திவிட்டு ஆதோனியைக் கைப்பற்றினார்கள். இறுதியில், அவர்கள் செய்த உதவிக்காக வீர நரசிம்மன் அவர்களுக்கு அந்தோனியையும் கர்நூலையும் ராணுவமானியமாகக் கொடுத்தான்.

இதற்கிடையில் உம்மத்தூரிலும் சீரங்கப்பட்டணத்திலுமிருந்த ஹியூணத் தலைவர்கள் விஜயநகரத்துக்கெதிராகக் கலகம் செய்தார்கள். வீரநரசிம்மன் தலைநகரைத் தன் தம்பி கிருஷ்ணராயனுடைய பொறுப்பில் விட்டுவிட்டுத் தன் படையுடன் தெற்கே சென்று உம்மத்துரை முற்றுகையிட்டான். மூன்று மாதம் முயன்றும் உம்மத்தூரை கைப்பற்ற முடியாததால் அவன் முற்றுகையை கைவிட்டுவிட்டு, சீரங்கப்பட்டணத்தின் மீது படையெடுத்தான். அங்கும் அவன்வெற்றி பெறவில்லை. ஆனால், துளு நாட்டில் அவன் சில சிறு வெற்றிகளையடைந்தான். அப்போது தான் மேற்குக் கடற்கரையில் தங்கள் வாணிக நிலையங்களை நிறுவிக்கொண்டிருந்த போர்த்துக்கீசியர்களுடன் அவன் நட்புறவான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான்.

தன்னுடைய போர் வீரர்களுக்கு நல்ல பயிற்சியை அளிப்பதற்கும் தன்னுடைய குதிரைப் படைக்குத் தேவையான குதிரைகளைப் பெறுவதற்கும் போர்த்துக்கீசியர்கள் உதவுவார்கள் என்று நம்பிக்கையில் அவன் கண்ணனூரிலிருந்த ஆல்மீடாவிடம் ஒரு தூதுக் குழுவை அனுப்பினான்.ஆனால், பட்கல் என்னுமிடத்தில் ஒரு கோட்டை கட்டுவதற்கு இசைவு கோரி ஆல்மீடா விடுத்த வேண்டுகோளுக்கு வீரநரசிம்மன் எவ்வித மறுமொழியும் தரவில்லை.

பிரபுக்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு வரையறைக்குட்பட்ட இருவர் போராட்ட முறையை ஊக்கியதன் வாயிலாகவும் வாட்போர்த் திறனுக்கு அழகிய பெண்களைப் பரிசு கொடுத்ததன் வாயிலாகவும் வீர நரசிம்மன் தன் குடிமக்களுடைய போர் விருப்பையும் திறமையையும் வளர்க்க முயன்றான்.

வீரநரசிம்மன் கோவாவைப் பிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டான். கோவாவிலிருந்த முஸ்லிம் ஆளுநர் விஜயநகரத்தரசனோடு போரிட்டுக்கொண்டிருந்தான் என்று இத்தாலியப் பணி வர்த்தமா என்பவன் எழுதி வைத்திருக்கிறான்(1506). ஆனால், அந்த முயற்சியில் வீரநரசிம்மன் வெற்றி பெற்றானா என்பது தெரியவில்லை. உம்மத்தூரை மீண்டும் தாக்குவதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்த சமயத்தில், 1509 இல்,அவன் இறந்து போனான். ராமேஸ்வரம்,சீரங்கம் ,கும்பகோணம் , சிதம்பரம்,ஸ்ரீசைலம்,காஞ்சிபுரம்,காலஹஸ்தி, மகாநந்தி,கோகர்ணம் முதலிய தென்னிந்தியக் கோயில்கள் பலவற்றிற்கு அவன் அளித்த தாரளமான கொடைகளை அவனுடைய ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த பொறிப்புகள் குறிப்பிடுகின்றன.

தன்னுடைய எட்டு வய்து மகன் தனக்குப் பின் அரசனாக வேண்டுமென்று விரும்பியதால், அவன் மரணப் படுக்கையிலிருந்த போது கிருஷ்ணதேவராயனுடைய கண்களைப் பிடுங்கிவிடுமாறு தன்னுடைய அமைச்சர் சாளுவதிம்மனைக் கேட்டுக்கொண்டதாயும், சாளுவதிம்மன், ஒரு பெண் ஆட்டின் இரு கண்களைக் கொண்டு வந்து அவை கிருஷ்ணதேவராயனுடைய முகத்திலிருந்து பிடுங்கப்பட்ட கண்கள் என்று காட்டியதாயும் நூனிஸ் எழுதி வைத்திருக்கிறார்.

ஆனால், அந்த ஒன்றுவிட்ட உடன் பிறந்தார்களுள் பகைமையிருந்தது என்று காட்டுவதற்கு எவ்விதச் சான்றும் இல்லை. மேலும், தனக்குப்பின் அரியணையேறுவதற்குரியவன் கிருஷ்ணதேவராயன் தான் என்று வீரநரசிம்மனே அவனைத் தெரிந்தெடுத்ததாக உள்ளூர் மரபு வழிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிருஷ்ணதேவராயனுடைய முதற் பொறிப்பில் குறிக்கப்பட்டுள்ள திகதி 1509 ஜுலை 26 என்பது. அதற்குப் பின் இரு வாரங் கழித்து அவன் கிருஷ்ண ஜயந்தியன்று முடிசூடிக் கொண்டான். அரசன் திருமாலின் அவதாரம் என்ற எண்ணத்தை உண்டாக்குவது அதன் நோக்கம். கிருஷ்ணதேவராயனுடைய ஆட்சிக்காலம் “ விஜயநகரத்தின் மிகச்சிறந்த காலம் ; அப்போது அந்தப் பேரரசின் படைகள் சென்ற இடமெல்லாம் வெற்றி பெற்றன. அந்தக் காலத்தில் தலைநகரம் மிகச்செழித்த வளமுடையதாயிருந்தது” கிருஷ்ணதேவராயன் அரியணையேறிய போது அவனுக்கு இருபது இருபத்தைந்து வயதிருக்கும். அரியணையேறிப் பத்தாண்டுக்குப் பின் கிருஷ்ணதேவராயனைப் பார்த்த பேயிஸ் பின்வருமாறு கூறுகிறார்.

'அரசன் நடு உயரமும் சிவப்பு நிறமும் அழகிய தோற்றமும் உடையவன். அவன் சிறிது தடித்திருக்கிறான் என்றே கூற வேண்டும். அவனுடைய முகத்தில் அம்மை வடுக்கள் இருக்கின்றன. குடிமக்கள் தம்முடைய அரசனைக் கண்டு அவ்வளவு அதிகமாக அஞ்சக்கூடும் என்று நாம் கருதலாமோ அவ்வளவு அதிகமாக அவனைக் காணும் மக்கள் அஞ்சுகிறார்கள்.அதுபோலவே அவன் எல்லாவகையிலும் குறைபாடற்றவனாக இருக்கிறான். அவன் இனிய இயல்புடையவனாகவும்,எப்போதும் களி மகிழ்வார்ந்தவனாகவும் இருக்கிறான்.அவன் வெளிநாட்டாரை வரவேற்று அவர்களை மதித்து நடக்கிறான்.

அவர்கள் எந்த நிலையில் இருப்பவர்களாயினும் அவர்களுடன் இனிமையாகப் பேசி அவர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் விசாரிக்கிறான். அவன் ஒரு பெரிய அரசன் ; நீதி நெறிவழுவாதவன். ஆனால், அவனுக்கு திடீர் திடீரென்று அடக்கமுடியாத கோபம் வந்துவிடும். அவன் கடுமையான உடற்பயிற்சியின் மூலம் தன்னுடைய உடல் வலிமையைக் காத்துக்கொண்டான். குதிரையேற்றத்தில் அவன் வல்லன்; காண்போர் களிக்கும் கம்பீரமான தோற்றமுடையவன்; தானே போர்க்களம் புகுந்து தன் போர் வீரர்களுக்குத் தலைமை தாங்கி நடத்துவதில் விருப்பமுடையவன்; ஆபத்தைக் கண்டு அஞ்சாத வீரமும் தளராத ஊக்கமும் உடையவன். தன்னுடைய போர்வீரர்கள் எல்லாரிடத்திலும் அவன் அன்புடையவன்; அவர்கள் நலத்தில் எப்போதும் கவனமுடையவன். ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும் காயமடைந்தவர்களைப் பார்த்து அவர்களுக்குத் தேவையான மருத்துவத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு அவன் தவறமாட்டான். அவனை அனைவரும் மதித்து அவனிடத்து அன்பு பாராட்டினார்கள்.பேயிஸ் கூறுவதைப் போல, அவன் “எல்லாரிடமும் நட்பு நயமுடையவனாயும் எல்லா வகையிலும் குறைபாடற்றவனாயும்” இருந்தான்.

கிருஷ்ணதேவராயன் பட்டத்துக்கு வந்த சமயத்தில் பேரரசின் நிலைமை மனநிறைவு தருவதாயில்லை. விஜயநகரத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கலகஞ் செய்த உம்மத்தூர் தலைவன் மைசூரின் பெரும்பகுதிக்கு உரிமை கொண்டாடினான். பேரரசின் வடகிழக்கு மாவட்டங்கள் ஒரிசாவின் ஆதிக்கத்தில் இருந்தன. விஜயநகரத்தின் மீது வெளிப்படையாய் பகைமை பாராட்டிய பிரதாப ருத்திரன் அந்த இராச்சியத்தை வலுச்சண்டைக்கு இழுப்பதற்கும் தயாராயிருந்தான். பாமினி இராச்சியம் நடைமுறையில் ஐந்து சிறு இராச்சியங்களாக பிரிந்துவிட்டதென்பது உண்மைதான் எனினும் முஸ்லிம்களுடைய பகைமை எவ்வகையிலும் குறைந்திருந்தது என்று சொல்ல இயலாது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

ஜம்பொன்

151



ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக இந்த FILIBUSTER ஆயுதம் தான் அமெரிக்காவின் தென்மாநில செனட்டர்களின் கையில் கறுப்பர்களுக்கு குடியுரிமைகளை வழங்குவதைத் தடுக்க உதவியது: கறுப்பர்களைத் தொடர்ந்து அடிமைத் தளையில் வாடச் செய்தது. அவர்களின் நம்பிக்கையொளியை அணைத்தது.

வாஷிங்டனுக்கு U.S. செனட்டராக வருவதற்குமுன் பத்தாண்டுகளாக சிக்காகோ பல்கலைக்கழகத்தில் ஒபாமா அரசியல் யாப்புச் சட்டம் கற்பித்தார்.

அமெரிக்காவை ஸ்தாபித்தவர்கள் ஏற்படுத்திய ஆவணங்களில் சுதந்திரப் பிரகடனம், சமஷ்டியாட்சி பற்றிய பத்திரங்கள், அரசியல் யாப்பு ஆகியனவற்றில் ஸ்தாபகர்களின் கனவுகள் பிரதிபலித்துள்ளன.

இருநூறு ஆண்டுகள்கழிந்தும் இன்றும் அவை பொருத்தமானவையாகவே விளங்குகின்றன.

ஒவ்வொரு அமெரிக்கனும் தன் கட்சி, இனமத வேறுபாடுகளுக்கப்பால் தனிநபர் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள் என்றால் அது நாட்டை ஸ்தாபித்தவர்கள் தூரநோக்குடன் தந்த செல்வங்கள் எனலாம். மனதில் எண்ணியதைக் கூறவும், சமயம் சார்ந்த சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடி அரசுக்கு தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லும் உரிமை, நியாயமற்ற தேடலும் கைப்பற்றலுமின்றி இருக்க உரிமை; காரணமின்றிக் கைதுசெய்து தடுத்து வைக்காமலிருக்க உரிமை; நியாயபூர்வமான விரைவான வழக்கு விசாரணைக்குட்படவுரிமை; குடும்பம், குழந்தைகள் அவரவர்கள் நினைத்த மாதிரி நல்ல முறையில் வளர்க்கும் உரிமை ஆகியனவற்றை அமெரிக்க அரச யாப்பு தன் குடிமக்களுக்கு வழங்கியுள்ளது.

இவ்வுரிமைகள் அனைவருக்கும் உரியவை. சுதந்திரத்தின் தாற்பரியத்தின் திரட்சி இவை. அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலும் வரையறைக்குட்பட்டுள்ளன. அமெரிக்காவின் குடியுரிமை பெற்ற அனைவரும் ஸ்தாபகர்களின் போதனைகளை ஏற்று நடக்க வேண்டும்.

தனி நபர் சுதந்திரம் சில வேளைகளில் அராஜகத்துக்கு வழிவகுக்கலாம்.சுதந்திரமும் ஒழுங்கும் பேணப்பட வேண்டுமாயின் ஜனநாயக வழிமுறைதான் மிகவும் உகந்த அரசியல் வடிவம் எனக் கண்டனர் அரசியல் ஞானிகள். ஜனநாயக முறையில் தான் ஆட்சியாளர்கள் பிரஜைகளின் சம்மதத்துடன் ஆட்சிசெய்வார்கள். சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் ஒரே மாதிரியானவையாகவும் எதிர்வுகூறக் கூடியதாகவும், வெளிப்படையானவையாகவும், எல்லா மக்களுக்கும் சமமாக ஏற்புடையதாகவும் இருக்க வேண்டும்.

உண்மையான ஜனநாயக நாடு என்று எடுத்துக் காட்டக்கூடியதாக அன்று எதுவும் இருக்கவில்லை. ஆகவேதான் அமெரிக்காவின் ஸ்தாபகர்கள் பிரதிநிதித்துவ அரசையும் சட்டத்தின் மூலமான ஆட்சியையும் நிறுவி தேசிய அரசை மூன்று சமமான கிளைகளாகவும், இருபகுதி கொண்ட (செனட்டும் மக்களவையும்) காங்கிரஸ், சமஷ்டி ஆட்சியின் மூலம் மாநில அரசுகளுக்கு ஆட்சி அதிகாரத் தை வழங்கினர். இதன்மூலம் அதிகாரம் பரவலாக்கப்பட்டது. உட்பிரிவினைகள் தவிர்க்கப்பட்டன. அபிலாசைகள் சீர்ப்படுத்தப்பட்டன. சிறுபான்மையாளர்களாலோ அல்லது பெரும்பான்மையாளர்களாலோ ஏற்படக்கூடிய கொடுங்கோன்மை தடுக்கப்பட்டது.

அமெரிக்காவின் வரலாறு ஸ்தாபகர்களின் உள்ளுணர்வொன்றை நியாயப்படுத்தியுள்ளது.குடியரசுதான் பரந்து வேறுபட்ட சமுதாயம் ஒன்றில் நன்கு தொழிற்படும் தன்மையது என்பதாகும்.அங்குதான் கட்சிகள் ஒவ்வொன்றும் உரத்த வேறுபட்ட குரலில் தங்கள் கருத்துக்களை எடுத்தியம்பி பல்வேறு கோணங்களிலிருந்து ஒவ்வொரு விடயத்தையும் அலசமுடிகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு மலர் – 17.10.2009


இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்



அதிக கிலோமீற்றர் ஓடக்கூடிய NO-1 ரயர்

DUNLOP 2WT

Two/Three Wheeler Tyres

STANDARD SERIES



6 மாத உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்

ஏகவிநியோகஸ்தர்கள்

PRESIDENT AUTOMOTIVE BATTERIES

No 1

QUALITY BATTERY IN SRI LANKA

பி.என்.பி. மோட்டோர்ஸ்
113,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.






ஆட்டோ உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

சிவா மோட்டோஸ்

(மனோகரா தியேட்டர் அருகாமை)
486 A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0779113962 - 0778736770


## தீபாவளியினை வரவேற்போம்

நாராயணனே அன்று நீ
உன் அடியார்களை இன்னல்படுத்திய
நரகாசூரனை வதம் செய்ததால்
இனிதாய் தீபாவளியை கொண்டாடினோம்
ஆனால் இன்று இந்த ஜெகத்துள்ளே
எத்தனை நரகாசூரர்கள்
நாராயணனே இவ் ஜெகத்துள்ளே
வாழும் நரகாசூரர்களை அழித்து
எம் அகிலத்திலும் இல்லத்திலும் உள்ளத்திலும்
நிறைந்திருக்கும் இருளை நீக்க
அவனியிலே அவதரிப்பாய் என்ற நம்பிக்கையுடன்
தீபங்களை வரிசையாக ஏற்றி
இத் தீபாவளியினை வரவேற்கின்றோம்.

*நா. கீதாகிருஷ்ணன்*
*நயினாதீவு.*

## தித்திக்கும் தீபத் திருநாளே தீர்வொன்றை நீ தருவாய்

தித்திக்கும் தீபத் திருநாளில்
எத்திக்கும் இன்பங்கள்
எங்குமே நிறைய வேண்டுகிறோம்
சித்தங்கள் தெளிவுற
தேசமது வளம் பெற
தீர்வொன்றைத் தேடி
தினம் நாம் புலம்புகிறோம்
இத்தனை நாட்களாய் நாம் பட்ட
இன்னல்கள் யாவும் நீங்கி
இத்தரையெங்கும் இன்பங்கள்
நிறைந்து விட
தீபங்கள் சுகம் தரும்
தீபாவளியை வரவேற்போம்.

குப்பிளான் செ.ரவிசாந்


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

PC PARADISE IIS COMPUTERS

61,Clock Tower Road,Jaffna
T.P. 021 222 9579 - 077 70271220

மாணவர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
நீதி, கணக்கியல் துறைகளில்
அங்கீகரிக்கப்பட்ட இங்கிலாந்து பட்டயக் கணக்காளர் சான்றிதழை வழங்கும்

ACCA

Jaffna Technical Institute
No: 45,Clock Tower Road, Jaffna
Email: accajaffna@gmail.com
(C-3521)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

சண் ஜெய உணவகம்

சகல விதமான உணவு வகைகளும், சிற்றுண்டி வகைகளும், ஐஸ்கிறீம், சோடா, சர்பத், நெல்லிரசம், நெஸ்கோப்பி போன்ற அனைத்து விசேட ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இல 414,மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 077 9285417, 077 6955757

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

கதிரவன் நகையகம்

அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்
188,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே–021 222 9315

தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

ரூபி நகை மாளிகை

111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 2828
021 222 9038

தீபாவளி நல்வாழ்த்துக்கள்
அற்லஸ் முகவர்களும் ஏக விநியோகஸ்தரும்

பாடசாலை காரியாலய உபகரணங்கள், அச்சகத்திற்கு தேவையான பல வர்ண காகிதாதிகள், மாணவ மாணவிகளுக்குத் தேவையான கவர்ச்சி தரும் அப்பியாசக் கொப்பிகள், எழுது பொருட்கள், கணனி உபகரணங்கள், பொலித்தீன் வகைகள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்.

பேப்பர் ஹவுஸ்

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 5343 , 222 2783


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டு ஓடாமல் இருப்பதுதான் கடினம்.
>
> – ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி

# உண்மைப் பொருள் உணராத தீபாவளிக் கொண்டாட்டம்

இன்று தீபத் திருநாள். மனித மனங்களில் குடிகொண்ட அசுரத்தனத்தை அழிப்பதனால் எங்கும் பிரகாசம் பொங்கும் என்ற தத்துவத்தை உணர்த்தும் நாள்.

இந் நாளில் புத்தாடை அணிந்து, புதுவகை சிற்றுண்டி உண்டு, வீட்டோடு மகிழ்வது தீபத் திருநாளின் அர்த்தமன்று. இருந்தும் அதுவே நடைமுறையாகி விட்டது.

நாம் புத்தாடை அணிவதால் மகிழ்வடைவது மனிதப்பண்பன்று. மாறாக பக்கத்திருப்பவர் படும் துன்பத்தில் பங்கேற்று அவரின் ஏழ்மை வாழ்வில் ஒளி ஏற்றி அந்தக் குடும்பமும் புத்தாடை அணிந்து ஏழைகளின் சிரிப்பில்–நாமும் புத்தாடை அணியும் போது இருக்கின்ற மகிழ்வே ஆத்மார்த்தமான இன்பமாகும்.

இங்குதான் இறைவன் சிரிக்கின்றான். இதனாலேயே ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற தத்துவமும் எழுகை பெற்றதெனலாம்.

எனினும் யாழ்ப்பாண மண்ணில் தீபாவளி கொண்டாட்டத்தின் வழிமுறைகளை நினைத்தால் வேதனையே எஞ்சும்.

மதுக்கடைகளின் உற்சாகம், இறைச்சிக் கடைகளின் சடசடப்பு, படமாளிகைகளில் முண்டியடிப்பு என்ற பட்டோலை தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

கூடவே விபத்துக்கள், அடிதடிகள் என்ற பட்டியலில் யாழ். போதனா வைத்தியசாலையின் 24 ஆம் விடுதியும் களைகட்டும்.

என் செய்வது அசுரத்தனம் அழிந்த நாளில் அசுரத்தனம் மேல் எழும் பரிதாபம் தீபாவளி கொண்டாட்டத்தின் உண்மைப் பொருளை எதிர் பெறுமானமாக்கி விடுகின்றது.

இதிலிருந்து விடுபடும் சிந்தனை இம்மியும் ஏற்படவில்லை.

சமயப் பெரியார்கள் தீபாவளித் திருநாளின் மகிமைபற்றி எழுதியும், பேசியும், களைத்து விட்டார்கள். எஞ்சியது வேதனையைத் தவிர வேறு எதுவும் இல்லை.

எனவே தீபாவளித் திருநாளின் தத்துவத்தை அனுஷ்டிப்பதற்கான மறுமலர்ச்சி ஒவ்வொரு குடும்பங்களிலும் ஏற்படவேண்டும்.

இதற்கு அரச அமைப்புகளினதும், சமூக நிறுவனங்களினதும் ஒத்துழைப்புத் தேவை.

தீபாவளித் திருநாளில் மதுபானக்கடைகளை மூடவும், இறைச்சி வெட்டுவதை தடுக்கவும் சட்டம் இருப்பது அவசியம்.

அதேநேரம் மாணவர்களிடையே தீபாவளியின் ஆழமான தத்துவத்தை எடுத்தியம்புவதும், சமூகப்பார்வையிலும் அனுபவ நடைமுறையிலும் தீபாவளிக் கொண்டாட்டம் பாவம் நிறைந்த –மக்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதை உணர்த்தி தீபாவளித் திருநாள் பற்றிய நேர்க்கணிய எண்ணக்கருவை உருவாக்க வேண்டும்.

அதுவே எதிர்காலத்திலாவது தீபாவளித் திருநாளின் அர்த்த புஷ்டியை அரங்கேற்றும்.

# கேதார கௌரி நோன்பின் மகத்துவம்

## இன்று கேதார கௌரி விழா நிறைவு நாளாகும்



கைலயங்கிரியின் சிகரத்தில் உமையம்மை சமேதரராய் சிவபெருமான் பக்தகோடிகள் தரிசிப்பதற்காக தேவசபையில் வீற்றிருந்த வேளை அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திர விகட நாட்டியமொன்றை ஆடிக்காட்டுகிறார். உமையம்மையும் அங்கே இருக்கின்றாள். தேவர்கள் ஆனந்தம் மேலோங்க சிரித்து மகிழ்கின்றார்கள்.

பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தால் பெரிதும் மகிழ்கின்றார். சிவனது அனுக்கிரகமும் மகரிஷிக்கு கிடைக்கிறது. அதனை கண்டு சபையினரும் பிருங்கி மகரிஷியை பாராட்டுகின்றனர். அந்த நேரம் பிருங்கி பயபக்தியோடு பார்வதியை நீங்கி சிவபெருமரனை வலம் வந்து வணங்குகின்றார்.

பிருங்கி முத்தி நிலையை விரும்பி நிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லையென்ற திடசித்தம் கொண்டார். அதனால் உன்னைவிட்டு என்னை மாத்திரம் வணங்கி சென்றார் என பரமசிவன் பார்வதிக்கு விளக்கினார். பார்வதி வருத்தப்பட்டு சிவனிடம் கோபம் கொள்கின்றாள்.

கோபத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கியினின்றும் அகலக் கடவது என்று வாய்விட்டு கூறிவிடுகின்றாள். பிருங்கியின் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்க முடியாமல் தள்ளாடுகின்றார். அப்பொழுது சிவபெருமான் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கின்றார். பிருங்கி தண்டின் உதவியோடு ஆச்சிரமம் போய் சேருகின்றார்.

சக்திக்கு மேலும் கோபமுண்டாக கைலையை விட்டு நீங்கி பூலோகம் வந்து வால்மீகி மகரிஷியின் பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்து இருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடம் மழை இல்லாது வாடின விருட்சமெல்லாம் மலர்ந்தன. வால்மீகி அவ்விடத்திற்கு வந்து இவற்றைக் கண்டு அதிசயிக்கின்றார்.

தாயே கைலாயத்தை விட்டு தாங்கள் பூலோகம் வர காரணம் என்ன?வென கேட்க அம்பிகை தான் பூலோகத்திற்கு வந்த கதையை கூறிவிடுகின்றார். தேவி ஆச்சிரமம் சென்று வால்மீகி அமைத்த நவரத்தின சிம்மாசனத்திலமர்ந்து மகரிஷியே பூலோகத்தில் மேலான விரதமொன்று அனுஷ்டிக்க வேண்டும் கூறுங்கள் என்றார்.

மகரிஷி, தாயே சிறந்த விரதமொன்றுண்டு என்று கூற அதனை தேவி புன்னகைத்து விரதத்தை ஆலம ரத்தின் கீழே அமர்ந்து ஆரம்பித்தாள். மணலிலே லிங்கம் செய்து சிவனாகப் பாவித்து பூஜை செய்கிறாள். 21 நாள் பூஜை நிகழ்கிறது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்லவுருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை நைவேத்தியமாக வைத்து தீபம் காட்டி வணங்கி 21 இழை எடுத்து தரித்து 21 முடிச்சு போட்டு சிவனை நினைந்து காப்பு கட்டுகிறாள்.

காப்பு அணிந்தவுடன் சிவபெருமான் தேவி முன் தோன்றி தேவி உமக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க, அம்பிகை உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டும் என்று கேட்டு விடுகிறாள். ஆகட்டும் என சிவபெருமானும் வரமருளினார்.

என்னை நோன்பு நோற்று வரம் பெற்ற யார் இந்த 21 நாளும் விரதம் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களும் அடைவர் என்ற வரமும் நல்கி சிவபெருமான் பார்வதி சமேதரராய் அர்த்த நாரீஸ்வர வடிவோடு கைலயங்கிரிக்கு எழுந்தருளினார்.

அதிலிருந்து கௌரி நோன்பு பூலோக வாசிகளால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இக் கௌரி நோன்பை அனுஷ்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர். இவ் விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கற்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை, வலம் வருதல் என்பனவாகும்.

ஆகவே ஒவ்வொருவரும் இல்லங்களிலும் இதனை செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலை அமைய வேண்டும். இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூஜை செய்தல் மேலானது.

21 நாட்கள் விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதி நாளில் எல்லாப் பூஜையையும் முடித்துக் கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பதே முக்கியமானதாகும்.

தொல்புரத்தூர்.க. லோகேஸ்வரன்.

# வவுனியா வைத்தியசாலையில் பாதுகாப்பு அதிகரிப்பு

## நோயாளரும் பார்வையாளர்களும் சிரமத்தில்

(கொழும்பு)

வவுனியா பொது வைத்தியசாலையில் பாதுகாப்பு அதிகரித்திருப்பதனால் நோயாளர்களும் நோயாளர்களைப் பார்க்கச் செல்பவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்றவர்கள் பலர் அங்கிருந்து தப்பி வெளியில் செல்வதைத் தடுப்பதற்காகவே வைத்தியசாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வவுனியா மாவட்டம் தவிர்ந்த வேறு மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களே இவ்வாறு சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வைத்தியசாலைக்குள் சிகிச்சைக்காகச் செல்பவர்களும் சரி நோயாளர்களைப் பார்ப்பதற்காக அவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்பவர்களும் நுழைவாயிலில் தமது தேசிய அடையாள அட்டையைக் கொடுத்து அதற்குரிய இலக்கத் துண்டு ஒன்றைப் பெற்றுச் செல்ல வேண்டும்.

இவ்வாறு செல்பவர்களை ஆங்காங்கே நடமாடுகின்ற அல்லது கடமையில் இருக்கின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அடையாள அட்டைக்கான துண்டு இருக்கின்றதா எனக் கேட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபவடுவதாகப் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள்.

இவர்கள் இவ்வாறு தடுத்து நிறுத்தி சோதனையிடுவதற்கான விசாரணைகளில் ஈடுபடுவதனால் நோயாளர்கள் கிளினிக்கு அல்லது வைத்திய பிரிவுகளுக்குச் செல்வதில் தாமதமும் சிரமமும் ஏற்படுவதாகவும் நோயினால் வதைபடுபவர்கள் மேலும் அவஸ்தைக்கு உள்ளாக நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நோயாளர்களைப் பார்ப்பதற்காகக் காலை, மதியம், மாலை நேரங்களில் செல்பவர்களிடம் வார்டுகளுக்குச் செல்வதற்கான பாஸ் இருக்கின்றதா என்பதைப் பரிசீலனை செய்வதற்காகப் பொதுமக்களிடம் அதிகாரத் தோரணையில் மிரட்டி ஏசுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்தத் தொல்லைகளைக் கடந்து நோயாளர்களைப் பார்வையிட்டு அல்லது நோய்க்கான மருந்தினைப் பெற்றுக் கொண்டு தமது தேசிய அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு திரும்பும் போது நுழைவாயிலில் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். வைத்தியசாலையில் இருந்து வெளியேறுபவர்களின் தேசிய அடையாள அட்டையைப் பரிசீலனை செய்யும் பொலிஸார் அதில் பிறந்த இடம் வவுனியா என குறிப்பிட்டிருந்தால் எந்தவித கஷ்டமுமின்றி வெளியில் செல்ல அனுமதிக்கின்றார்கள்.

வவுனியா மாவட்டத்தைத் தவிர்ந்த வேறு மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தால் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் தற்போது தங்கியுள்ள இடத்தை உறுதிப்படுத்துவதற்கான வேறு உறுதியான ஆவணங்களைக் கோரி தடுத்து நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனதின் ஆற்றல்கள்



நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அதற்கு அர்ப்பணித்துவிடு. ஒருமுறை சன்னியாசிப் பெரியார் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் தமது கடவுள் வழிபாட்டிற்கும் தியானத்திற்கும் எவ்வளவு ஊன்றிக் கவனமும் கருத்தும் செலுத்தினாரோ அதே [illegible] தமது பித்தளைச் சமையல் பாத்திரங்களையும் தேய்த்துப் பொன் [illegible] கொள்வார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழக எம்பிக்களின் இலங்கை வருகை

# கண்ணீர் துடைப்பு பயணமாக இல்லாமல் கண்துடைப்பு பயணமாக அமைந்தது

ஈழமக்கள் துயரத்தைப் பார்க்கும் போது இது கண்ணீர் துடைப்பு பயணமாக இல்லாமல் கண்துடைப்பு பயணமாக அமைந்திருப்பது புரிகின்றது என தமிழகத்தின் முன்னணி வார இதழான குமுதம் தெரிவித்துள்ளது.

அதனது நேற்றைய பதிப்பில் இலங்கைக்கான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவினரது இலங்கை விஜயம் தொடர்பான சிறப்புக் கட்டுரை ஒன்றை பிரசுரித்துள்ளது.



அந்தக் கட்டுரையிலேயே வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தினை அது மேன்மைப் படுத்தி சுட்டிக்காட்டியுள்ளது. இராவணன் காலத்தில் இலங்கைக்கு அனுமன் வந்ததுண்டு. ஆனால் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்த தமிழக எம்.பிக்கள் குழுவிற்கு சனீஸ்வரன் தலைமையேற்று வந்திருப்பது யாழ். பொது நூலகத்திற்குச் சென்ற பின்பே தெரிய வந்தது என கடுமையாக தலையங்கம் எழுதியிருக்கின்றது. யாழ். வலம்புரி நாளிதழ் என பல்கலைக்கழக மாணவரை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளது.

இக்கட்டுரை மேலும் வருமாறு,

இலங்கை அகதி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் உண்மை நிலையை கண்டறியும் தமிழக எம்.பிக்களின் பயணத்தை பற்றி ஈழத்தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள். இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்கள் மாணவர்களிடம் பேசினோம்.

பிள்ளையின் அச்சுறுத்தல்கள் இன்னும் தொடர்வதால் முதலில் பேசத் தயங்கியவர்கள் தங்கள் பெயரை வெளியிட வேண்டாம் என்று நினைத்துப் பேசினார்கள். தமிழக எம்.பிக்கள் வரவால் ஒரு மாற்றம் ஏற்படும் முகாம்கள் பற்றி அரசாங்கம் கூறும் தகவல்கள் சரியா என்பதைக் கண்டறிந்து உண்மைகளை அவர்கள் வெளிப்படுத்துவார்கள். என்று எதிர்பார்ப்பும் இருந்தது.

ஆனால் வழக்கப்படியே அரசாங்கம் அழைத்துச் சென்று காண்பித்த முகாம்களுக்குத்தான் தமிழக எம்.பிக்கள் சென்றார்கள். அவர்கள் முகாம்களுக்குச் சென்ற போது அவர்களுடன் பத்திரிகையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இலங்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் பிற இலங்கை அரச அதிகாரிகளும் மட்டுமே உடன் சென்று இருந்தனர். அவர்கள் முன்னிலையிலே தமிழக குழுவினர்களிடம் அகதிகள் எப்படி சுதந்திரமாக பேசியிருக்க முடியும் என்கிறார்.

இலங்கையில் புகழ்பெற்ற ஓர் ஆங்கில பத்திரிகையாளர் இந்தக் களத்தில் கனிமொழி மீதும் திருமாவளவன் மீதும் தான் ஈழத் தமிழர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் எங்கள் பயணத்தில் நாங்கள் கண்டதை அறிக்கையாக இந்தியர்களிடம் சமர்ப்பிப்போம் என்பதுடன் கனிமொழி முடித்துக் கொண்டது அம்மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை தந்திருந்தது.

திருமாவளவன் யாழ்ப்பாண மக்களை சந்திப்பதற்கு இலங்கை இராணுவத்தினரிடம் அனுமதி கேட்டிருந்தார். ஆனால் அதற்கு இராணுவத்தினரிடம் அனுமதி கேட்டிருந்தார். ஆனால் அதற்கு இராணுவத்தினர் மறுத்து விட்டனராம்.

முதல்நாள் யாழ்ப்பாணத்திற்கு தமிழக எம்.பிக்கள் குழு சென்ற போது மங்கள வாத்தியம், பொன்னாடை, மலர்மாலை, பாடல் நினைவுப் பரிசு என தடல்புடலாக வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது.

மக்கள் மிகுந்த துயரத்தில் இருக்கும் போது தங்களுக்கு வழங்கப்பட்ட இந்த வரவேற்பை கனிமொழியும் திருமாவளவனும் விரும்பவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தலைமையுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படையான ஈ.பி.டி.பி குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தான் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தரர்.

அதன்பிறகு யாழ்ப்பாண பொதுநூலக மண்டபத்தில் தமிழக எம். பிக்கள் மக்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாங்கள்அனுபவித்த துன்பங்கள் எல்லாம் போதும். இழப்புகளை இனிமேலும் எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது. எங்களுக்கு நிரந்தரமான தீர்வை பெற்றுத்தந்து நிம்மதியாக வாழ உதவுங்கள். அபிவிருத்தி பணிகளை விட முதல் எங்கள் மக்களை கொடூரமான அகதி முகாம்களில் இருந்து மீளக்குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யுங்கள் என அப்பகுதி மக்கள் கண்ணீர் வடித்தவாறு வேண்டி நின்றார்கள்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ராஜீவ் காந்தி கொலையை காரணம் காட்டி இலங்கை எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்? இன்னும் எத்தனை மக்கள் கொல்லப்படப் போகிறார்கள் கூறுமாறு கேள்வி எழுப்பதமிழக எம்பிக்கள் மௌனம்சாதித்தனர்.

இச் சந்திப்பில் டி.ஆர். பாலுவின் நடவடிக்கைகள் யாழ்ப்பாண மக்களிடையே கடும் கோபத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. எங்கள் கஷ்டகாலத்திலும் ஒரு கஷ்டகாலம் தமிழக குழுவிற்கு டி. ஆர்.பாலு தலைமையேற்று இருந்தது.அவர் யாழ் . பொது நூலகத்தில் இடம்பெற்ற பொது மக்கள்சந்திப்பில் யாரும் சரியாக பேச அனுமதிக்கவில்லை.

ஒரு சிலர் கூறிய கருத்துக்களையும் செவிமடுக்கவில்லை.

கனிமொழியையும் திருமாவளவனையும் கூட இவர் பேசவிடவில்லை. அடுத்ததாக யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் ரி. ஆர் பாலு பற்றி கடுமையான விமர்சனங்கள் வெளியாகியிருந்தது.

## குமுதம் வார இதழ் தெரிவிப்பு

இராவணன் காலத்தில் இலங்கைக்கு அனுமன் வந்ததுண்டு. ஆனால் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்த தமிழக எம். பிக்கள் குழுவிற்கு சனீஸ்வரன் தலைமையேற்று வந்திருந்ததை யார் பொது நூலகத்திற்கு சென்ற போது தெரியவந்தது என கடுமையாக தலையங்கம் எழுதியிருந்தது. யாழ். வலம்புரி நாளிதழ் என்கிறார் யாழ். பல்கலைக்கழகமாணவர்.

இந்தக் குழுவில் எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல பத்திரிகையாளர்கள், மனித உரிமையார்வளர்கள், சுதந்திர கண்காணிப்பாளர்கள் என எவரும் இல்லை.

உள்நாட்டு இராமேஸ்வர மீனவர்களின் உயிருக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை பெற்றுக் கொடுக்க முடியாத தமிழக அரசா எங்களைக் காப்பாற்றப் போகிறது. உள்நாட்டு சேவைகள், உள்நாட்டு பத்திரிகையாளர்கள் என எவரையும் அகதி முகாம்களுக்கு அனுமதிக்காத ராஜபக்ஷ அரசாங்கம்இந்திய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் அனுமதிப்பதன் ஊடாக இந்தியாவை திருப்திப்படுத்துகின்றது.

இவர்கள் செல்வார்கள், பார்த்தார்கள், அழுதார்கள், வாக்குறுதிகள் வழங்குவார்கள் இலங்கை அரசியல்வாதிகளுடன் கதைப்பார்கள், திருப்தி வந்து கலைஞரின் வெற்றி என்று பிரற்றுவார்கள், அறிக்கை சமர்ப்பிப்பார்கள் ஒன்றுமே செய்ய மாட்டார்கள் இது தான் நியம்.

ஈழத்தமிழர்களின் இரத்தத்தையும் சதையையும் இவர்கள் அறுத்தெடுக்காத அடகு வைக்கும் அநியாயம் அரங்கேறப் போகிறது என குறிப்பிட்டிருக்கிறார் இன்னொரு யாழ் பல்கலைக்கழக மாணவன்.

# விற்றமின் மாத்திரை உட்கொண்டதால் திடீர் சுகவீனமுற்ற மாணவர்கள்

## ஏறாவூரில் சம்பவம்

(கொழும்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் பாடசாலை மருத்துவ பரிசோதனையின் போது வழங்கப்பட்ட விற்றமின் மாத்திரைகளை உட்கொண்டதன் காரணமாக திடீர் சுகவீனமுற்ற மாணவர்களின் எண்ணிக்கை 160க்கு மேல் அதிகரித்திருப்பதாக வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏறாவூர் மாக்கான் மாக்கார் வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை பாடசாலையில் நடைபெற்ற மருத்துவ பரிசோதனையின் போது 450க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விற்றமின் மாத்திரைகள் வழங்கப்பட்டன.

இம்மாணவர்களில் சுமார் 75 பேர் பாடசாலையில் சுகவீனமுற்ற நிலையிலும் ஏனையோர் கடந்த புதன்கிழமையும் வியாழக்கிழமையும் பாடசாலையிலும் வீடுகளிலும் சுகவீனமுற்ற நிலையிலும் ஏறாவூர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் பாடசாலையில் பெற்றோருக்கு விளக்கமளிக்கும் வகையில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சில மாணவ மாணவிகள் திடீரென மயக்கம் போட்டு சுகவீனமுற்றனர்.இதையடுத்து ஏற்பட்ட அமளிதுமளி காரணமாக இக் கூட்டத்தில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி பொலிஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இக்கூட்டத்தில் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் கல்வி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் பெற்றோர்கள் என பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

காலை ஆகாரம் உட்கொள்ளாமல் பாடசாலைக்குச் சமூகமளித்த மாணவர்களே இவ்வாறு சுகவீனமுற்றதாக சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் இதனை பெற்றோர்களும் மாணவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

காலை ஆகாரம் உட்கொண்டு பாடசாலைக்கு வந்திருந்த மாணவர்களும் குறித்த விற்றமின் மாத்திரை உட்கொண்ட பின்பு திடீர் சுகவீனமுற்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை தகவல்களின் படி 32 மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் நேற்று முன்தினம் மாலையுடன் சிகிச்சை முடிந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். (ஓ-6)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093 - E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way**
**French Classes**

Alliance Francaise de Jaffna இன் ஊடாக சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.
சிறுவர்கள், மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
*வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்*
*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(3637)


**சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்**
**மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரால் வெளியிடப்படும் அறிவித்தல்**

**திருத்தம்**

வலம்புரிப் பத்திரிகையில் 10.10.2009 அன்று 6 ஆம் பக்கத்தில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் பிரசுரிக்கப்பட்ட மரணசாசன அதிகாரப் பத்திர அறிவித்தலில் வழக்கு இல.05/2009 (தத்துவம்) என வெளி வந்துள்ளது.

இங்கு குறிப்பிட்ட இலக்கம் தவறானது எனவும் வழக்கு இல.06/2009 (தத்துவம்) எனவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

வரைபு
செ.கணபதிப்பிள்ளை
மனுதாரரின் சட்டத்தரணி.

மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த நீதி அமைச்சர் மிலிந்த மொறகொடவை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜா அழைத்து வருவதையும் நீதி அமைச்சர், நீதிபதிகள் மற்றும் சட்டத் தரணிகள் முன்னிலையில் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வர்களையும் முன்புள்ள படங்களிலும் பருத்தித்துறை நீதிமன்றிற்கு நீதி அமைச்சர் அழைத்துச் செல்லப்படுவதை இறுதியாகவுள்ள படத்திலும் காணலாம்.

# வெளிமாவட்ட மக்கள் யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 பாதையூடாக வர அனுமதிக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்தும் கொழும்பிலிருந்தும் நேரடியாக ஏ-9 வீதியூடான பஸ் சேவையில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் யாழ்ப்பாணத்திற்கு சுதந்திரமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டு மென சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து பயண பாதுகாப்பு அனுமதி பெற்று வெளிமாவட்டங் களுக்கு சென்ற மக்கள் மட்டுமே யாழ்ப்பாணத்திற்கு ஏ-9 வீதியூடான பஸ் சேவையில் பயணிக்க முடியும்.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து நீண்ட காலத்திற்கு முன்னர் வெளிமாவட் டங்களுக்கு வந்தவர்களும் வெளிமாவட்டத்தை சொந்த இடமாக கொண்டவர்களும் வவுனி யாவிலிருந்து ஏ-9 வீதியூடாக பஸ்களில் பயணிக்க முடியாது.

எனவே வெளிமாவட்டத்தில் தங்கியிருக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களையும் வெளிமாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டவர்களையும் ஏ-9 வீதியூடான பஸ் சேவையில் சுதந்திரமாக பயணிக்க அனுமதி வழங்க வேண்டுமென சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ விரைவில் நடவடிக்கை எடுப் பதாக உறுதியளித்துள்ளார். (ச-5)

# இலங்கைக்கு மேலும் உதவி...

இதற்கான உறுதி மொழியை வெளி விவகார அமைச்சர் ரோகித போகொல் லாகமவுக்கு அளித்தார். அமைச்சர் மட்டக் கலந் துரையாடலுக்கு வெளியே இரு நாட்டு அமைச்சர்களும் தனியாகச் சந்தித்துப் பேசிக் கொண்டனர். அப்போது கண்ணிவெடி அகற்றல் மற்றும் மீள்குடியமர்வு விடயங்களில் இலங் கை அரசு எதிர்கொள்ளும் சிக்கல்களை இந்தியா புரிந்து வைத்துள்ளதாக அமைச்சர் பிரிநீட் கவுட் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களில் இலங்கை கோரினால் மேலதிக உதவிகளை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் ரோகித போகொல்லாகமவுக்கு உறுதி அளித்தார்.

அண்மையில் சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டு திரும்பிய தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் அறிக்கையைப் படித்த பின்னர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி மத்திய அரசிடம் இது தொடர்பில் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

கண்ணிவெடிகளை அகற்றும் விடயத்தில் இந்தியா மேலதிக உதவிகளை வழங்க வேண்டும் என்று அவர் கோரி இருந்தார்.

வடபகுதியின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கென இந்தியா ஏற்கனவே 500 கோடி இந்திய ரூபாய் நிதி உதவியை இலங்கைக்கு வழங்கி உள்ளது. (ச-5)

# புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்க...

பிலும் நீதித் துறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராய நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

இக் குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத கம்லத்; சிரேஷ்ட சொலிசெற்றர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ,புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயாரட்ண, சிறைச்சாலை ஆணையாளர் உட்பட பல வருகை தந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சரை பலாலி விமான நிலையத்திற்குச் சென்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா வரவேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிபதி கே.அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மிலிந்த மொறகொட நீதிமன்றுக்குத் தேவையான உபகரணங்களைக் கையளித்தார்.

தொடர்ந்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பழைய அமைவிடமான ஹாட்லிக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள பகுதிக்குச் சென்ற அமைச்சர், பருத்தித்துறை நீதிமன்றுக்கான புதிய கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முதன்மைப்படுத்தி முன்னெடுக்குமாறு தமது அமைச்சு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பின்னர் விமானப் படையின் விசேட ஹெலிகொப்டர் மூலம் யாழ்.கோட்டைக்கு வருகை தந்த அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் குழுவினர் யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம் செய்தனர்.

அங்கு சென்ற அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் யாழ்.சிறைச்சாலைக்கான புதிய கட்டடத்தை ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச காணியில் விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து யாழ். நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கு வருகை தந்த அமைச்சர் மிலிந்த மொறகொட கட்டிட அமைவை பார்வையிட்டார்.

தொடர்ந்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் யாழ். மேல் முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்ற விஷேட மாநாட்டில் கலந்து கொண்டார்.

இம் மாநாட்டில் சட்டத்தரணிகளுக்கான அலுவலகம் அமைத்தல் தொடர்பில் அமைச்சர் விரிவாக ஆராய்ந்தார்.

### நீதிபதிகள், சட்டத்தரணிகளுக்கு பாதுகாப்பு அனுமதியில்லை

பின்னர் யாழ். மாவட்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு ஏ-9 வீதியூடாக பிரயாணிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட தேவையில்லை என்பதை அமைச்சர் மிலிந்த மொறகொட அறிவித்தார்.

இனிவரும் காலப்பகுதியில் யாழ். கட்டளைத்தளபதியிடம் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுச் செல்ல முடியும்.

இதற்கான அறிவுறுத்தலை யாழ். கட்டளைத்தளபதிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார் எனவும் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து அமைச்சர் மிலிந்த மொறகொட யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து மதத் தலைவர்களையும் புத்திஜீ விகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

மற்றும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத் திற் குமான மக்கள் குழுவினரை சந்தித்தும் கலந்துரையாடினார்.

இதில் யாழ்.அரச அதிபர் க.கணேஷும் கலந்து கொண்டார்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத் திற்குமான மக்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பல்வேறு விடங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதில் வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள் குடியமர்த்துவது, சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கான புனர்வாழ்வு, யாழ். மக்களின் பொதுவான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப் பட்டது.

இதில் வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை குடியமர்த்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதன் மூலம் நம்பிக்கையை கட்டி எழுப்புமாறு புத்திஜீவிகளால் அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

அங்கு கருத்து தெரிவித்த நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அரசுடன் இணைந்து பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வில்,யாழ். மாவட்ட செயல கத்தில் கடந்த 2 நாட்கள் நடைபெற்ற மத்தியஸ்தர் சபைகளுக்கான பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ்களை அமைச்சர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வுக்காக சென்ற யாழ். உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கு படையினராலும் பொலிஸாரினாலும் அனுமதி மறுக்கப்பட்டது. (ச-5)

# தமிழர் படுகொலை குறித்த...

விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தொடர்ந்து விடுத்த கோரிக்கைகள் பலவற்றுக்கு அரசு பதிலளிக்கவே இல்லை என ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான தலைவர் நவநீதம்பிள்ளை தெரிவித்தார்.

போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து அனைத்துலக விசாரணை வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் கூட ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் என நவநீதம்பிள்ளை பிரசெல்ஸில் ஊடகவியலாளர்களைச் சந் தித்தபோது தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தான் பொறுப்புடன் நடந்துகொள்வார் என இலங்கை ஜனாதிபதி ஐ.நா பொதுச் செயலாளருக்கு உறுதி அளித்திருந்தார்.அதனை அவர் நிறைவேற்றுகிறாரா என்பது குறித்து அறிவதற்கு பொதுச் செயலாளருடன் நாங்கள் நெருங்கிச் செயற்படுகின்றோம்.

உறுதியளித்தபடி ஜனாதிபதி இந்த விடயத்தில் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என்பதை நாங்கள் அறிய வேண்டும் என்றார் நவநீதம்பிள்ளை.

அனைத்துலக பட்டினிக்கு எதிரான நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் கிழக்குப் போரின்போது கொல்லப்பட்டமை குறித்து இலங்கை நடத்திய விசாரணைகளைச் சுட்டிக் காட்டிய நவநீதம்பிள்ளை, அந்தக் கொலைகள் மிக மோசமானவையாக இருந்தபோதும் அது குறித்து தேசிய அளவில் நடத்தப்பட்ட விசாரணைகள் கைவிடப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட்டுக் கூறினார்.

மிக முக்கியமான குற்றங்கள் தொடர்பில் அவர்கள் நடத்திய விசாரணைகள் குறித்து இதுவரை நல்ல பதிவுகள் எவையும் இல்லை.தற்போது எந்த வகையிலான விசாரணை முறைகள் அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்பது தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளருடன் நான் ஆராய்ந்து வருகின்றேன்.ஆனாலும் இவற்றை அரசு நிராகரிக்கின்றது என்பதுதான் நான் இறுதியாகச் சொல்லக்கூடியது என நவநீதம்பிள்ளை மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து அறிந்துவரும் பொருட்டு அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளவதற்கு நவநீதம்பிள்ளை திட்டமிட்டுள்ளாரா என ஊடகவியலாளர்கள் வினவினர்.

அதற்குப் பதிலளித்த அவர், தான் இலங்கை சென்றால் தன்னை அனுமதிக்கப் போவதில்லை என்று ஐ.நா பொதுச் செயலாளரிடமும் பொது அரங்கிலும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது என்றார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மற்றும் மன்னா...

சேர்ந்த 2 ஆயிரத்து 4 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப் பட்டனர்.

இதில் 144 கர்ப்பிணித் தாய்மார்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுமாக 418 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப் பட்டனர்.

இக் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு இன்று காலை உறவினர்களிடம் கையளிக் கப்படுவர். அத்துடன் மன்னார் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 129 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும் நேற்று அழைத்து வரப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

இதனைவிட வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தீவகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 352 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 201 பேர் அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் 142 குடும்பங்களைச் சேர்ந்த 498 பேர் காரைநகர் இடைத்தங்கல் முகாமிலும் 210 குடும்பங்களைச் சேர்ந்த 703 பேர் வேலணை இடைத்தங்கல் முகாமிலும் தங்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டனர். இம் மக்கள் இன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர்.

இத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து தீவகத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் அழைத்து வரும் பணி நிறைவடைந்தது.

எனவே நாளை முதல் யாழ்.மாவட்டத்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களை அழைத்து வரும் பணி துரிதமாக நடைபெறும். இதில் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் நாளை வவுனியா முகாம்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவர்.

இதுவரை வவுனியா நலன்புரி முகாமிலிருந்து யாழ்.மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 4 ஆயிரத்து 140 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 888 பேர் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களில் 2 ஆயிரத்து 979 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 852 பேர் கடந்த 14 ஆம் திகதி வரை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். இதேவேளை நேற்று அழைத்து வரப்பட்ட மக்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று யாழ்.அரச அதி பர் க.க்ணேஷுடன் பார்வையிட்டார். அத்துடன் மீள்குடியமர்த்தும் நடவடிக்கை தொடர்பிலும் அமைச்சர் ஆராய்ந்தார். (ச-5)

## கனேடிய...

கனேடிய ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான பற்றிக் பிரவுண் மற்றும் பவுல் கலண்ட்ரா ஆகியோரின் விசா வேண்டுகைகளே நிராகரிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தினர். (ச-5)

# நயினை பரமசாமிக் குருக்கள் இறைவனடி சேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியார் கோப்பாய் வடகோவை சிவஸ்ரீ மு.வை.பரமசாமிக்குருக்கள் நேற்று இறையடி சேர்ந்தார். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பிரதமகுருக்களான இவர் நயினை பரமசாமிக்குருக்கள் என சிறப்பாக அழைக்கப்பட்டார்.

நயினைநாகபூசணி அம்மன் மீது அலைகடந்த பக்திப்பரவசம் கொண்ட இவரின் மகோற்சவக் கிரியைகளால் ஆயிரக்கணக்கான அடியவர்கள் இவர் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தனர்.

ஈழத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்களில் மகா கும்பாபிஷேகங்களையும் மகோற்சவங்களையும் தலைமைக் குருவாக நடத்திய பெருமை இவருக்குரியது.

இவரின் மறைவு குறித்து நயினை நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை தலைவர் ஆ.தியாகராஜா, செயலாளர் எஸ். சரவணபவன் மற்றும் சமயப் பெரியவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

இவரின் பூதவுடல் கோப்பாயிலுள்ள அவரின் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ந)

## யாழ்ப்பாணத்துக்கான...

தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை தற்போது ஈரப்பெரிய குளத்திலிருந்து ஆரம்பமாவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவையை ஆரம்பித்து பொதுமக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி தமது சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவுக்கு இது தொடர்பில் விசேட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவையை பத்து நாள்களுக்குள் வவுனியா நகரிலிருந்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ, வவுனியா அரச அதிபர் ஊடாக உரிய நடவடிக்கை முன்னெடுத்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையை வவுனியா நகரிலிருந்து ஆரம்பிக்கும் நடவடிக்கையைப் பத்துத் தினங்களுக்குள் முன்னெடுப்பதாக வவுனியா அரச அதிபர், சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறுதியளித்துள்ளார். (ச-5)

## எத் தேர்...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நவம்பர் மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் அடுத்த வருடத்திற்கான கணக்கறிக்கையைச் சமர்ப்பித்து விட்டு ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதா? அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவது உகந்ததா? எனக் கூட்டணிக் கட்சித் தலைவர்களை அழைத்து, நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடலில் ஐக்கிய சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ் உட்பட இதரக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில் ஜனாதிபதித் தேர்தலையா? நாடாளுமன்றத் தேர்தலையா? முதலில் நடத்துவது எனவும் சாதக பாதக விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

எனினும் மீண்டும் விரைவில் கட்சித் தலைவர்கள் கூடி எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பது தொடர்பில் அறிவிக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் கூட்டணிக் கட்சிகளை, எந்தத் தேர்தலையும் எதிர்கொண்டு வெற்றி பெறக் கூடிய வகையில் பிரசார பணிகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். (ச-5)


**உடன் தேவை**

கொம்பியூட்டர் ரைப்பிங் (தமிழ்,ஆங்கிலம்) நன்கு தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.(முன் அனுபவம் விரும்பத்தக்கது) (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

எமது மேலதிக சேவைகள்:-
1) Photo copy.
2) Internet Browsing.
3) Binding.
4) Computer type setting.
5) Colour print.
6) School Instruments.

தொடர்புகளுக்கு:-
நியூ கோல்டன் ஸ்டார்
226, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(யாழ்.பல்கலைக்கழக அருகாமை)
T.P:-021 222 6981
077 9522444
(3798)

வாடிக்கையாளர்களுக்கு எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
தீபாவளி சிறப்பு விலைக்கழிவு

MS-01: 1.6 GHz Processor, Intel Atom Mother Board, 1GB DDR-2, 160 GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 16"LCD, DVD Writer — 37000/=
MS-02: 1.6 GHz Processor, Intel Atom Mother Board, 1GB DDR-2, 160 GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 16"LCD, DVD Writer, UPS — 41000/=
MS-03: 2.6 GHz Processor (Dual Core), ASUS Mother Board(G31), 1GB DDR-2, 160 GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 16"LCD, DVD Writer — 44000/=
MS-04: 2.6 GHz Processor (Dual Core), ASUS Mother Board(G31), 1GB DDR-2, 160 GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 16"LCD, DVD Writer, UPS — 48000/=
MS-05: 2.6 GHz Processor (Dual Core), ASUS Mother Board(G31), 1GB DDR-2, 320GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 19"LCD, DVD Writer, UPS — 51000/=
MS-06: 2.6 GHz Processor (Dual Core), ASUS Mother Board(G31), 2GB DDR-2, 500GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 19"LCD, DVD Writer, UPS — 53000/=
MS-07: 2.93 GHz Processor (Core 2 Duo), ASUS Mother Board, 2GB DDR-2, 320GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 19"LCD, DVD Writer, UPS — 59000/=
MS-08: 2.93 GHz Processor (Core 2 Duo), ASUS Mother Board, 2GB DDR-2, 500GB Hard Disk, ATX Casing, Key Board, Optical Mouse, 24"LCD, DVD Writer, UPS — 94000/=

MARSHA SYSTEMS (PVT) LTD
#74, Kannathiddy Road, Jaffna
T.P- 0212229418,0212222100

Teknel Computer&Technology
Kodikamam Road,Nelliady
T.P- 0213210384
(C-3515)

**நியூ சிற்றி ரேடர்ஸ் இடமாற்றம்**

சகல விதமான றேடியோக்கள்,கசற் ரெக்கோடர்கள்,கார் ரேடியோக்கள், கார் ஸ்பீக்கர்கள், DVD பிளேயர்கள், டிஸ் அன்ரனா, ரிசீவர்கள், 14"–21" கலர் T.V கள்,வூபர்கள்,பவல்கள், ரைஸ்குக்கர்கள், கிரைண்டர்கள்,காஸ் குக்கர்கள்,பிரசர் குக்கர்கள், மண்ணெண்ணெய் அடுப்புகள்,ஹொட்பிளேட், அயன்,ரோஸ்ரர்கள்,சார்ச்லைற்கள், சார்ச் ரோச்,ஸ்ரப்ளைசர்கள்,மேசை,கூரை மின்விசிறிகள், கஸ்சியோ ஓகன்கள், சுவர்,மேசை,கை மணிக்கூடுகள்,அம்பிளிவயர்கள்,மைக்,ஸ்ராண்ட் மற்றும் வீட்டு மின் இணைப்புகளுக்கான சகல மின்சார பொருட்களையும் ரேடியோ, T.V, உதிரிப்பாகங்கள்(IC ரான்சிஸ்டர், கொண்டென்சர்கள்)என்பனவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் அவற்றை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

T.P.:- 021 222 3226
நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. வீதி,யாழ்ப்பாணம்.
(C-3479)

பாடசாலை மாணவர்கள் (Grade 10, G.C.E O/L, G.C.E A/L)
உயர்கற்கை நெறி மாணவர்கள், உத்தியோகத்தர்கள்,
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆர்வலர்கள்
அனைவருக்குமான கட்டுரைகள், வினாத்தாள்கள் – விடைகள்
மற்றும் பல்வேறு தகவல் தொழில்நுட்ப விடையங்களுடன்
ஓர் முழுமையான புதுமைப் படைப்பு

அதிரடி விற்பனையில்

இலங்கையின் முதற்தர
சமகால தகவல் தொழில்நுட்பம்
விலை : ரூபா 350.00 மட்டுமே
யாழ்ப்பாணம் வவுனியா கொழும்பு
யாழ் நகரில் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளர், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

DELMEGE- மில்க்றோ, பேக்கிங் பவுடர், ஜாம், ஐசிங் சுகர், ரின் மீன், TVP சோயாமீற், ஜலற்றீன், புடிங், நூடில்ஸ், கஸ்ராட் பவுடர், கரமல், வட்டிலப்பம், கொக்கோ பவுடர் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.



ஸ்ரீ றங்கன் என்ரப் பிறைஸ்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 021 222 2027

Lanka Milk Food
Dairy Farm
Corn Flakes
My Juice
Farleys Rusk 60 g
Farleys Rusk 150g
Casilian 120g
Casilian 250g
கப்பிகவ் சீஸ்

சில்லறை சாமான் பலசரக்கு வகை



(C-3528)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org